சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு சித்திரைமாதம் 29-ந் திகதி சனிக்கிழமை — பிரசுரம் 12 | 16-ம் இலக்கம்

உழைப்பின்உன்னதத்தை உலகுக்குணர்த்திய உத்தமரின் உயர்தினம்

உரிமைகுன்றிய சமுதாயம் உரிமைக்குரல் எழுப்பிய உயர்தினம்; உழைப்பின் மகத்துவத்தை உலகம் உணர்ந்து சீரான நீதிமுறைகளைக் கைக்கொண்ட சிறந்ததினம். மேதினம், கடின உழைப்பின்தினம். தொழிலாளர் தினம். ஏழைத்தொழிலாளியான புனிதசூசைமாதவனின் புகழ்த்தினமும் அதுவே. சூசைமாதவன், யேசுதேவனின், வளர்ப்புத்தந்தையாய், பரிபாலகனுய் இறைவனுல் தெரிந்தெடுக்கப்பட்டார். நசரேத்ஊரின் ஏழைத்தச்சன் அவர். நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த அன்றுடம் உழைத்து வாழ்வைச் செப்பனிட்ட கடினஉழைப்பாளி. உடலுவருத்தி உழைத்துத் தமது திருக்குடும்பத்தை அமைதியுடன் பாதுகாத்த பொறுமைசாலி. வியர்வையின் ஒவ்வொருதுளியையும், கிறிஸ்துவின் அன்புக்காக உதிர்த்து, துன்பத்தின் மடியிலே அமைதியையும், ஆத்மஇன்பத்தையும் அவர் அனுபவித்து வந்தார். அவரது அயராத உழைப்பின் திறத்தால், பணிவான நற்குணத்தால், ஆடம்பரமற்றவாழ்வுச் சிறப்பால், அமைதியின் நெறியால், அடக்கத்தின் வாயிலால், உலகின் தொழில்களனைத்தும் புனிதமடைந்தன; உயர்வுபெற்றன. தொழிலாளரின் வர்க்கம் பெருமையும், தூய்மையும், உயர்வும்பெற்றுப் பிரபல்யமடைந்தது.

தொழிலாளரின் மாதிரிகையே! என்று திருச்சபை சூசைமாதவனைப் போற்றிப் புகழ்கின்றது. அர்ச். சூசையப்பரையும், தொழிலாளரையும் இணைத்துப்பார்க்கும் இம்மகத்துவப் பிணைப்பு இன்றுநேற்று எழுந்ததன்று. என்றென்றுமே உண்டு என்பதைப் பரிசுத்த சுவிசேஷத்திற் பார்க்கின்றோம்.

13-ம் சிங்கராய பாப்பரசர், "பாட்டாளிகளின் எடுத்துக்காட்டு" என்று அர்ச். சூசையப்பரைக் குறிப்பிட்டார்.

"தொழிலாளர்களின் விண்ணுலகப் பாதுகாவலர் அர்ச். சூசையப்பரே" என்று 15-ம்ஆசீர்வாதப்பர் பிரகடனம் செய்தார்.

தொழிலாளரின் உரிமையை நிலைநாட்டுகிறோம்; எதேச்சாதிகாரத்தையும், அடிமைத்தனத்தையும் பூண்டோடு அழிக்கிறோம். புத்துலகம் சமைக்கிறோம். பூலோகமோட்சமருளுகிறோம் என்று பாமரமக்களை அழிவின்பாதையிலே — அக்கிரமப்படுகுழியிலே இட்டுச்செல்லும் ஆதிக்கவெறிபடைத்த நாத்திகப்பேயின் பொய்ப்பிரசாரத்தைச் சிதைக்கும் சம்மட்டியாக, காப்பாளராக "ஏழைத்தச்சனை சூசைமாமுனிவனையே 11-ம்பத்தி நாதபாப்பரசர் உலகுக்களித்தார். பொதுவுடைமை என்னும் தீயசக்திக்கு எதிராகப் போராடும் திருச்சபையின் பாதுகாவலராய் புனிதவளனுரிலங்குகின்றார். அவர் வெற்றி விருதின்கீழ் நாம்

(10-ம் பக்கம் பார்க்க)

அர்ச். சூசையப்பர் 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பரலோக பாதுகாவலர்

பரிசுத்த பாப்பரசர் 23-ம்அருளப்பர் அண்மையில் விடுத்தஒரு நிருபம்மூலம் திருச்சபையின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரை அண்மிவரும் 2-ம்வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பரலோக பாதுகாவலராக நியமித்துப் பிரகடனம் பண்ணியுள்ளார். "திருச்சபையின் பொதுச்சங்கம் ஒன்றை ஆயத்தம் செய்வதற்கும், நடத்துவதற்கும் அவசியமான தேவபலத்தைப் பெற்றுத் தரக்கூடிய பரலோக பாதுகாவலர் ஒருவரை நாம் தேடினுல், திருக்குடும்பத்தின் தலைவரும், திருச்சபையின் பாதுகாவலருமான அர்ச். சூசையப்பரைப் பார்க்கக் கூடியபொருத்தமுள்ள வேறொருவரைப் பரலோகவாசிகளுள் காணமுடியாது" என்று அந்நிருபத்தில் பரிசுத்த பாப்பரசர் கூறியுள்ளார்.

நம் பத்திரிகை

ஊரடங்குச்சட்டம் எதிர்பாராதவிதமாகப் பிரகடனஞ் செய்யப்பட்டதையிட்டும், மற்றும் சில காரணங்களை முன்னிட்டும் சென்றவாரம் "பாதுகாவல" ஐ வெளியிடமுடியாமற்போனதையிட்டு வருந்துகின்றோம்.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு பர்மாப்பிரதமர் மீண்டும் உறுதிமொழி அளித்துள்ளார்

"நம்நாட்டில் பௌத்தர்களுக்கும், மற்ற மதத்தினர்க்கும் இடையில் நிலவிவரும் ஒற்றுமை என்றுமே நிலைத்திருக்க வேண்டுமென்று உறுதிகொண்டுள்ளோம்."

இவ்வாறு பர்மாதேசத்துப் பிரதம மந்திரியான ஊனு அவர்கள் வடகிழக்கு ஆசியாவின் அங்கிலிக்கன்சபைப்பிரதியட்சர்களின் மகாநாட்டுக்குச் சென்றிருந்தஅங்கத்தினர்க்குஅளித்த உத்தியோகபூர்வமான விருந்துபசாரத்தின் போது கூறியுள்ளார். பௌத்தர் அல்லாதார்க்குப் பிரதம மந்திரியவர்கள் உறுதிவாக்கு அளித்தது இது இரண்டாவது முறையாகும். சென்ற வருடம் ஒக்டோபர் மாதத்தில் வேதப்பரப்புதல் திருச்சங்கத்தின் தலைவரான மேன்மைதங்கிய கருதினல் அகஜியானியான் ஆண்டவர் அவர்கள் பர்மாதேசத்தைத் தரிசித்தபோது பிரதமர் ஊனு இதேவிதமான உறுதிவாக்கைப் பௌத்தர் அல்லாதார்க்கு அளித்தது வாசகநேயர்களின் ஞாபகத்தில் இருக்கும்.

"பௌத்தமதத்தைப் பர்மாவின் தேசிய மதமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதைப்பற்றி ஒருசிலர் அச்சமும் அங்கலாய்ப்பும் தெரிவித்துள்ளனர். பர்மாதேசத்து 85 வீதத்தினரான பௌத்தர்கள்பௌத்தமதத்தைத் தேசியமயமாக்கும்படி கோரி இருப்பதால், அவர்களுடைய கோரிக்கை வெகுவிரைவில் நிறைவேற்றப்படவிருக்கின்றது. இவ்வாறு பௌத்தசமயம் பர்மாவின் தேசியமதமாகப் பிரகடனப்படுத்தப்படுவதனுல் ஏனையமத சமூகங்களுக்கு அரசியல் சட்டத்தினுல் தற்போது அளிக்கப்பட்டுவரும் பாதுகாப்புக்கள்எதுவிதத்திலும் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமென்று அரசாங்கம் உறுதி

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்றிராசனங்கள் தரும்செய்தி

கொலெனியா எம். பி. க்குக் கத்தோலிக்க பிரசைகள் முன்னணித் தலைவரின் பதில்

"தனக்கும், வண. றிங் கோன், ஓ. எம். ஐ. சுவாமியவர்களின் வாசகால அனுமதிச்சீட்டு ரத்தானதற்கும் ஒருவகையான தொடர்பும் இல்லை" என்று திரு. ஆர். எஸ். பெரேரா, எம். பி. அவர்கள் டெயிலி நியூஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகை நிருபர் ஒருவருக்குக் கூறினார். இதற்குப்பதிலாகக் 'கத்தோலிக்க பிரசைகள் முன்னணி'த் தலைவர் திரு. ரோக் பெரேரா (Messenger) மெசெஞ்சர் பத்திரிகைக்குப் பின்வருமாறு கூறினார். "கெலெனியா பாராளுமன்றப் பிரதிநிதியாகிய திரு. ஆர். எஸ். பெரேரா அவர்களை எங்களுடைய பிரதிநிதிகள் சிலர் பேட்டிகண்டு, சுவாமி றிங் கோன் அவர்களின் வாசகால அனுமதிச்சீட்டையிட்டுப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். திரு. ஆர். எஸ். பெரேரா அவர்கள் தன்னுடைய கோரிக்கையின்பேரில் அரசாங்கம் எடுத்துள்ள தீர்க்கமான முடிவை மாற்றும்படி தான் கேட்கமாட்டார் என்றார். சுவாமியின் வாசகால அனுமதிச்சீட்டு ரத்தானதையிட்டு, இவர்தான் அதற்கு முழுக்காரணமாயிருந்தார் என்பதை அவரே மறுத்திருப்பது விளங்கமுடியாத புதிராயிருக்கிறது. இவர் விரும்பினால் அதை ருசுப்படுத்த நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்" என்று கூறினர்.

"கத்தோலிக்க பிரசைகள் முன்னணி"யின் வேண்டுகோள்

கொழும்பு அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த பத்தொன்பது விசாரணைப் பங்குகளையும், ஏனைய விசாரணைப் பங்குகளையும் சேர்ந்த நாலாயிரத்துக்கு அதிகமான கத்தோலிக்க மக்கள் கூடந்த வாரம் டளுகம தேவாலயத்தின் முன்பாகக்கூடிக் 'கத்தோலிக்க பிரசைகளின் முன்னணி'யொன்றை அமைத்துக்கொண்டனர். இந்தக் கூட்டத்தில் டளுகம விசாரணைப்பங்கின் கட்டளைக்குரவரது வாசகால உத்தரவுப்பத்திரத்தை ரத்துச்செய்யக் கெலனியாப் பாராளுமன்றப் பிரதிநிதி எடுத்துக்கொண்ட முயற்சியைப் பலமாகக் கண்டித்தனர். மேற்படி கட்டளைக்குரவரின் வாசகால உத்தரவுப்பத்திரத்தை ரத்துச்செய்யும் அரசாங்கத்தின் நோக்கத்தைக் கைவிடும்படி பிரதமமந்திரி அவர்கட்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

புதிதாக உருவாக்கப்பட்ட 'கத்தோலிக்க பிரசைகள் முன்னணி' கொழும்பு அதிமேற்றிராசனத்தோடு இணைந்து செயலாற்றும். கத்தோலிக்கரின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதே இதனது முக்கிய நோக்கமாகும். இந்த முன்னணியில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர் எல்லோரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. வண. றிங்கன், ஓ. எம். ஐ. சுவாமி அவர்களின் வாசகால உத்தரவுப்பத்திரத்தைத் தடைசெய்வதெனச் செய்யப்பட்ட முடிவை ரத்துச்செய்யும்படி பிரதம மந்திரி அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுப்பது.

2. மேற்படி வேண்டுகோள் பயனளிக்காதபட்சத்தில் வண. றிங்கன் சுவாமியாரின் வாசபேர்மிட் ரத்தாவதற்குக் காரணமாயிருந்த கெலனியாப் பாராளுமன்றப் பிரதிநிதியாகிய திரு. ஆர். எஸ். பெரேரா அவர்களைத் திருச்சபைக்குப் புறம்பாக்கிவிடுமாறு அதிமேற்றிராணியாருக்கு மனுப்பண்ணுவது.

பின்வருவோர் 'கத்தோலிக்க பிரசைகள் முன்னணி'யின் உத்தியோகஸ்தராகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. வேர்ணன் ரொக் பெரேரா, செயலாளர்: திரு. பி. ஜே. எஸ். பெரேரா, தனாதிகாரி: பி. டி. குணவர்த்தனை.

ஹொறணையில் பூசைப் பரிசாரகர்

பரிசுத்தவாரத்தின் பெரிய திங்கட்கிழமையன்று தினத்தைக் களுத்துறை விசாரணைப்பங்கின் பூசைப் பரிசாரகர் கோஷ்டியினர் ஹொறணையில் உள்ள அர்ச். பிலோமினம்மாள் தேவாலயவளவில்உள்ள தொழில்நிலையத்தில் செலவிட்டனர்.

பாணந்துறை விசாரணைப் பங்குக் கிறிஸ்தவர்களின் ஐக்கிய சங்கம்

சென்ற பங்குனிமாதத்தில் கூடிய பாணந்துறை விசாரணைப்பங்கின் கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் பிரச்சினையில் நல்ல மனதோடு ஒத்துழைத்துப் பாடசாலைகளை மறியல்செய்தும், மறியல்செய்வதில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு உணவும், பணஉதவியும், வேறு சரீரஉதவிகளும்செய்த கத்தோலிக்கருக்கும், மற்றும் கத்தோலிக்கரல்லாதாருக்கும் பாணந்துறை விசாரணைப்பங்கின் கத்தோலிக்க ஐக்கிய சங்கம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றது."

களுத்துறைச் செய்திகள்

கத்தோலிக்க பிரசுரவாரத்தை முன்னிட்டுக் கடந்த பங்குனி மாதத்தில் களுத்துறை விசாரணைப்பங்கில் ரூபா 900-க்குக் கத்தோலிக்கபிரசுரங்கள் விற்பனையாகி இருப்பது பற்றிப் பெருமைப்படவேண்டும் என்று களுத்துறைக்கட்டளைக்குரவர் வண. கென்றி றொட்றிகோ சுவாமி அவர்கள் கத்தோலிக்க பிரசுரங்கள் விற்பனைப் போட்டியில் வெற்றிபெற்றோருக்குப் பரிசுகள் வழங்கும்போது கூறினார். களுத்துறை அர்ச். ஜொாட் கொன்வென்ற்றைச் சேர்ந்த பிரசுரசேனை வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாத்திரிகர்களின் பாதுகாவலருக்கு 15,000 மக்களின் அஞ்சலி

யாத்திரிகர்களின் பாதுகாவலரான அர்ச். கிறிஸ்தோப்பரின் திருநாளைக் கொண்டாடு முகமாக இலங்கையின் எத்திசையிலுமிருந்து 15,000 மோட்டார்வாகனச் சொந்தக்காரர் கூடினர். பெரிய பாடற்பூசையின்பின் அர்ச். கிறிஸ்தோப்பரின வரவணிக்கங்கள் மோட்டார்ச்சாரதிகளுக்கு ஆசீர்வதித்துக் கொடுக்கப்பட்டது. அதன்பின் அர்ச். கிறிஸ்தோப்பரின் திருச்சுரூபம் பவனியாகக்கொண்டுசெல்லப்பட்டது. சுற்றுப்பிரகாரம் இருபதுமைல் நீளமாய் இருந்தது. சுற்றுப்பிரகாரத்தின்பின் கொச்சிக்கடை விசாரணைப் பங்கின் கட்டளைக் குரவரான வண. பீலிக்ஸ் மேவெல், ஓ எம். ஐ. சுவாமியவர்கள் மோட்டார் வாகனங்களை அர்ச். கிறிஸ்தோப்பரின் திருச்சுரூபத்தில் ஆசீர்வதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் ஒளி

— 4 —

(சா. பெ.)

[நம் தெய்வத் திருச்சபை நாளும் பொழுதும் கத்தோலிக்கரல்லாதாரைக் கவர்ந்து உலகப் பொதுமறை ஆகிவரும் வரலாற்றுக்கதை இது.]

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது மால்டாதீவிலிருந்த விமானப் படையினரின் ஆத்ம குருவாகக் கடமையாற்றினேன். அப்படையணியில் கத்தோலிக்கனல்லாத ஓர் இளைஞன் என்னுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தான். ஒருநாள் என் நண்பன் கார் மேல் கன்னியர்களின் மடத்தையும், ஆலயத்தையும் தனக்குக் காட்டும்படி கேட்டுக்கொண்டான்.

ஆகவே, யான் அவனையு மழைத்துக்கொண்டு கார்மேல் கன்னியர்களின் மடத்துக்குச் சென்றேன். அன்று கார்த்திகைமாதம் இரண்டாம்நாள். கத்தோலிக்க திருச்சபை உத்தரிக்கும் ஆத்துமாக்களை அத்தினத்தில் நினைவுறுத்துகிறது. கன்னியரின் சிற்றூலயம் அலங்காரமெதுவுமின்றிக் காட்சியளித்தது. ஆலயத்தின் நடுவிடமாக, கறுப்புத் துணியால் மூடப்பட்ட பிரேதப் பேழையும், நாலு மெழுகுவர்த்திகளும் காணப்பட்டன.

ஆலயத்தைவிட்டு வெளியேறிய என் நண்பன் அதிருப்தியடைந்தவனைத் தோற்றமளித்தான். "உங்கள் சமயம் துக்கரமான சம்பவங்களை ஏன் மனிதருக்கு நினைவுறுத்துகிறது?" என வினவினன். அன்றைய சடங்குகளின் நோக்கத்தைப் பலவிதமாக எடுத்துச் சொல்லியும் என் தோழன் திருப்தியடையவில்லை. எனவே, கிறிஸ்மஸ் தினத்தில் மீண்டும் ஒருமுறை எங்கள் ஆலயத்துக்கு வருமாறு கேட்டுக்கொண்டேன். அங்ஙனமே செய்வதாக உறுதியளித்தான்.

தனது வாக்குறுதியை மறக்கவில்லை அந்த இராணுவ வீரன். கிறிஸ்மஸ் நள்ளிரவுப் பூசைக்குச் சமூகமளித்தான். அலங்கார வேலைப்பாடுகளுடன் கம்பீரமாகக் காட்சியளித்தது அச்சிற்றூலயம். பூங்கொத்துகளும், வண்ண மேர்க்குரி விளக்குகளும் பீடத்தை அழகுறச் செய்தன. பூசையின் முடிவில் என் நண்பன் என்னிடம் விரைந்து வந்தான். "இன்றைய சடங்குகள் மிக நன்றாயிருந்தன. என்மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறது" எனக் கூறினன். "இன்று கிறிஸ்து ஜெனித்த தினம்; திருச்சபை தனது மக்களை இத்தினத்தில் அகமகிழச் செய்கிறது" என விளக்கினேன்.

"ஒரு மதம் தனது மக்கள் இன்பத்தையும், துன்பத்தையும் எவ்விதம் பகிர்ந்துகொள்ள வேண்டுமென விளக்கக்கூடியதாயிருப்பின் அழுவாரோடழுது, மகிழ்வாரோடு மகிழும்படி செய்யின், அதுவே உன்னதமான மதமாகவிருக்கவேண்டும்; நான் உங்கள் சமயத்தைப் பற்றி மேலும் பல உண்மைகளைத் தெரிந்துகொள்ள விழைகின்றேன்" என நண்பன் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியுற்றேன். சில தினங்கள் சத்தியவேதத்தின் தத்துவங்களை நன்கு கற்றபின் ஞான முழுக்குப் பெற்று உண்மையொளியைக் கண்டான் என் நண்பன். சில மாதங்கள் கழிந்தன. வானவெளியில் நடந்த விமானப் போரொன்றில் சிக்கித் தனதுயிரை இழந்தான் என் நண்பன் என்ற செய்தி கிடைத்தது. ஒருகணம் கலங்கினேன். நித்திய ஒளியை அவன் பெற்றான் என்ற நினைவு என் துன்பத்தை இன்பமாக்கியது.

— வண. எற்வேட் எம். வெலோ சுவாமிகள்

பலகத்துறையில் புதியகுரவரின் முதற்பூசை

சின்னறேமை என்று அழைக்கப்படும் நீர்கொழும்பிற்கு அருகாமையிலுள்ள பலகத்துறை என்னும் கிராமத்திலே நல்லவர் குலத்திலே தோன்றினர் வண. அன்னனி போல் சுவாமி அவர்கள். இவர் தமது ஆரம்பக்கல்வியை நீர்கொழும்பு அர்ச். மரியநாயகி கல்லூரியில் முடித்தார். பின் தேவ அழைத்தலை மேற்கொண்டு கண்டி பரிசுத்த இலங்கைநாயகி குருமடத்தில் சேர்ந்தார். பின்பு இவர் பூனை பரிசுத்த பாப்பரசர் குருமடத்தில் சேர்ந்தார். அங்கு சில ஆண்டுகள் பயின்றபின் 4-10-60-ல் றேமை விசுவாசப்பரப்புதல் சபைத்தலைவர் மகா மேன்மைதங்கிய கருதினல் அகாஜியானியன் ஆண்டவர் அவர்களால் குருத்துவ அபிஷேகம் செய்யப்பெற்றார். தமது பெற்றார் சமேதராகப் பலநூயிரக் கணக்கான மக்கள்மத்தியில் பூனை அர்ச். சவேரியார் தேவாலயத்தில் தமது முதற்பலியை நிறைவேற்றினர். அங்கிருந்து தமது தாய்நாடாகிய இலங்கைக்கு 19-3-60-ல் வந்துசேர்ந்தார்.

புதியகுரவர் அவர்கள் தமது ஜனன பதியாகிய பலகத்துறையில் தமது முதற் திவ்வியபலியை ஒப்புக்கொடுப்பதற்கு 9-4-61-ல் வருவதாக அறிவிக்கப்பட்டது. அந்நாள் பலகத்துறை மக்களுக்கு ஒரு பொன்னளாகும். என்றுமில்லாத ஒரு புதுஉற்சாகமும் சந்தோஷமும் மக்களிடையே காணப்பட்டது. பலகத்துறைப் பாடசாலைப் பிள்ளைகளும் ஊரவரும் வண. குருப் பிரசாதிகளும் ஒன்றுசேர்ந்து புதிய குரவரை வரவேற்க நின்றனர். ஞாயிறு காலை கிட்டத்தட்ட ஏழுமணி இருக்கும், புதியகுரவர் அவர்கள் சிலாபமேற்றிராசன விக்கார் ஜெனறல் அதிவண. மைக்கல் பெரேராசுவாமியார் அவர்களுடன் வந்துசேர்ந்தார். வெடிகள் சப்தித்தன. மக்களின் ஆனந்தகாகோசம் வானைத்தொட்டது. புதிய குரவருக்கு என்று ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த மண்டபத்தில் தமது பூசை வஸ்திரங்களை அணிந்தார் புதிய குரவர் அவர்கள். பலகத்துறையை ஜனனபதி

(தொடர்ச்சி 9-ம்பக்கம்)

உள்நாட்டுச் செய்திகள்

பாக்குநீரிணையில் நீச்சல் பந்தயம்

இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கு மிடையிலுள்ள ஆங்கிலேயகால்வாயில் வருடந்தோறும்நீச்சல்பந்தயம்நடத்தப்படுவதுபோல் தலைமன்னருக்கும், தனுஷ்கோடிக்குமிடையே நீச்சல்பந்தயம்ஒன்றைநடத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. இதற்குச் சென்னை அரசாங்கத்திடமிருந்து உத்தரவுபெறப்பட்டிருக்கிறது. இதனைநடத்த எவ்வளவோ ஆயத்தங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. ஆகவே, இதற்கு நீண்டகாலம் நன்குதிட்டமிடவேண்டியிருக்கிறது. அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவும், ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன.

கண்தானம்செய்ய வேண்டுகோள்

கண்சிகிச்சை பெறவருகின்ற திரளானகண்நோயாளரின் கண்களிலுள்ள குறைகளை நீக்குவதிலேகண் டக்டர்மாருக்கு உதவிசெய்யுமுகமாகக் கண்தானஞ்செய்யும் பரோபகாரிகள் இலங்கை ஆஸ்பத்திரிகளில் தேவைப்படுகின்றார்கள். அவ்விதம் கண்கள்தானஞ்செய்ய முன்வருவாரின்கண்களை அவர்கள் இறந்தபின் எடுத்துக்கொள்ளக் கூடியதாக உயிருடனிருக்கும்போதே அவர்கள் உதவவேண்டுமென்று கண்தானஞ் செய்வாரின் இலங்கைச் சங்கம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

மிளகாய்-வெங்காய உற்பத்தி

2கோடியே 70இலட்சம்ரூபா பெறுமதியான செத்தல்மிளகாயையும்,வெங்காயத்தையும் இலங்கை வருடந்தோறும் இறக்குமதிசெய்கின்றது. இவற்றின் இறக்குமதியைக் குறைக்கக் காணி-விவசாயமந்திரி உறுதிகொண்டுள்ளார். இப்பொருட்களின் இறக்குமதியை அறவேஇல்லாமல் செய்துவிடும்நோக்கமாக ஆயிரம்ஏக்கர்காணியில் வெங்காயம், மிளகாய் உற்பத்திசெய்ய விவசாயப்பகுதி நடவடிக்கை எடுத்திருக்கிறது.

முதலாவது நூல்தொழிற்சாலை

நிகழும்சித்திரைமாதம் முடிவதற்குள் இலங்கையின் முதலாவது நூற்கழிஉற்பத்தித் தொழிற்சாலை வேலை செய்யத்தொடங்கும். அவ்விதம் தொடங்கும்போது தற்போதையமதிப் பின்படி இந்நாட்டிலே துணிகள்தைவு செய்வதற்குத் தேவைப்படும் நூலில் நாலில்ஒருபங்கை — அதாவது பத்து இலட்சம்ரூத்தல்கழிநூலை அதுஉற்பத்திசெய்யத் தயாராகும். தேசிய துணிக் கார்ப்பொறேஷன் நூல்ஆலையை இம்மாதம் 27திகதியன்று பிரதமர்சிறீமா சம்பிரதாயமுறைப்படி வியாங்கொடையிலே திறந்துவைத்தும் நூல்உற்பத்திசெய்வது ஆரம்பமாகும். அதிகம் நவீனமாதிரியாக அமைக்கப்பட்டுள்ள இந்தத்தொழிற்சாலை தைவுவேலைக்குத் தேவைப்படும் மிகத்திறமானநூலை நூற்கக்கூடிய 13,000கதிர்களுடன் வேலைசெய்யத் தொடங்கும். இது 31ஏக்கர் விஸ்தீரணமானகாணியிலே அமைக்கப்பட்டுள்ளது.

புதிய 'மாசிவ்'பால்

புரதச்சத்து அதிகமாகவும், கொழுப்புச்சத்துக் குறைந்ததுமான 'மாசிவ்' என்ற புதுவகைப்பால் கொழும்பிலுள்ள பாற்சபையால் இப்போது விற்பனைசெய்யப்பட்டு வருகிறது. இது தயாரிக்கப்பட்டதும் கெதியாக விலைப்பட்டுப்போகிறது. இப்பால் ஒருபைத்து 35சதமாகவும், அரைப்பைத்து 20சதமாகவும் விலைப்படுகின்றது. மருதானையிலுள்ள பாற்சாலையிலே முதல் மூன்றுவாரங்களிலும் பதினாயிரம்ரூபாவுக்குமேல் இந்தப்பால் விலைப்பட்டுள்ளது. தற்போது பாற்சபையைச் சேர்ந்த ஒவ்வொரு பாற்சாலையிலும் 'மாசிவ்'பால் விலைப்பட்டுப் பிரஸ்தாபமடைந்துவருகிறது. விரைவிலே இப்புதுவகைப்பாலை மாகாணங்களிலும் விலைப்படுத்தப் பாற்சபை ஆயத்தப்படுகின்றது.

கண்டியிலே தண்ணீர்க்கஷ்டம்

நெடுநாள் மழைபெய்யாத காரணமாகக் கண்டிநகரிலே மற்றுமொரு தாம் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. கட்டுப்பாடான குறைத்தபங்கீட்டுவீதமாகத் தண்ணீர்கொடுபட்டுவந்தபோதிலும் அங்கருக்குத் தண்ணீர்உதவும் தடாகத்தில் நாற்பதுநாட்களுக்குமாத்திரம் போதியதண்ணீரே இருக்கின்றது. சென்ற 17-ந்திகதியிலிருந்து தினமும் காலை 6மணிமுதல் 8-30மணிவரை இரண்டரை மணித்தியாலம்மாத்திரமே தடாகத்திலிருந்து நகர்வாசிகளுக்குக் கட்டுப்பாடாகத் தண்ணீர் உதவப்படுகிறது. காலை 8-30மணிமுதல் மத்தியானம் 12மணிவரைக்கும், பிற்பகல் 1மணிமுதல் 4மணிவரைக்கும் குளோரின்போட்டுச் சுத்தப்படுத்திய கண்டிவாவித்தண்ணீரும் வழங்கப்படுகிறது.

முத்துக்குளிப்பு பலனளிக்கவில்லை

மன்னர்க்குடாவிலே சிலாபத்துறைக்கப்பால் நடைபெற்றுவரும் முத்துக்குளிப்பு இம்முறை பலனளிக்கவில்லை. முத்துக்குளிப்பு ஆரம்பமானபோது ஒவ்வொன்றும் சுமார் 800 சிப்பிகளைக் கொண்ட சாக்குகளிலே முத்துச்சிப்பிகள் கொழும்புக்கும், மன்னருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுச் சாக்குஒன்று 30ரூபாவீதம் விலைப்படலாயிற்று. சிப்பிவாங்குகிறவர்களில் பெரும்பான்மையினர் இந்தியவியாபாரிகளே. இவர்கள் ஒன்றுசேர்ந்து சிப்பிகளின்விலையை இம்முறை அதிகம் குறைத்தவிகிதத்தில் கேட்டார்கள். அவர்களின்கேள்வியைக் கடற்தொழிற்பகுதி ஏற்றுக்கொள்ளவில்லை. கேள்விகுறைந்தமையால் சிப்பிகளும் குறைவாகவே குளிக்கப்பட்டன. இதற்கிடையில் சிப்பிகள்குளித்துவந்த இருயந்திரப்படகுகளும் பழுதுபார்க்கப்படவேண்டிய அவசியம்நேர்ந்தது. பின்னர் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பெரும்ஆதாயத்தை இழக்கப்போவதாக உணர்ந்தவியாபாரிகள் உயர்ந்த கேள்வியாகச் சாக்குஒன்றுக்கு 24ரூபாவீதம் விலைபேசினார்கள். அவர்களின் கேள்வி ஏற்கப்படலாயிற்று. இருயந்திரப்படகுகளும் பழுதுபார்க்கப்பட்டுத் திரும்பவும் சிப்பிகள்குளிக்கத்தொடங்கியதும் இந்தவிலையிலே எத்தனைசாக்குச் சிப்பிகளைக் கொடுத்தாலும் தாங்கள் வாங்குவதற்குச் சித்தமாயிருப்பதாக வியாபாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

சம்பள ஏற்றம்இல்லை

பாராளுமன்றத்திலுள்ள சனப்பிரதிநிதிகள்சபை அங்கத்தவர்களுக்கும், செனற்சபை அங்கத்தவர்களுக்கும் கொடுபட்டுவரும் சம்பளங்களைக் கூட்டவேண்டுமென்றயோசனை இப்போது கைவிடப்பட்டுள்ளது. அவர்களின் சம்பளங்களைக் கூட்டும்விஷயமாய் இருசபைகளையுமேசேர்ந்த இணைக்கமிற்றி ஒன்று தெரியப்பட்டது. சனப்பிரதிநிதிகள்சபைத்தலைவரும், செனற்சபைத் தலைவரும்கூடிச் செனற்சபை அங்கத்தவர்களைக்காட்டிலும் சனப்பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்களுக்கே கூடியசம்பளஏற்றம் செய்யப்படவேண்டுமெனத் தங்களுள் ஒருஉடன்பாட்டுக்கு வந்தனர். ஆனால், பாராளுமன்ற அங்கத்தவர்களின் சம்பளங்களைக் கூட்டப்படாதென்று பொதுசனஅபிப்பிராயம் பிறந்ததால் அவ்வளவில் எல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

மூதூர்த்தொகுதி உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையிலே மூதூர்ப் பிரதிநிதியாய் இருந்துவந்த திரு. ரி. ஏகாம்பரம்அவர்கள் காலஞ்சென்றமையாலே காலியாயிருக்கும் அவருடையஸ்தானத்திற்கு அபேட்சகர்களாக முன்வருவார் தங்கள் நியமனப்பத்திரங்களைத் திரிகோணமலைக்கச்சேரியிலே சமர்ப்பிக்கவேண்டியதினம் அடுத்தவைகாசிமாதம் 17-ந்திகதி புதன்கிழமையென்று 'கெசற்'றிலே பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது.

அரசாங்கஊழியரும் சிங்களப் பரீட்சையும்

அரசாங்கஊழியருக்கான முதலாவது சிங்களதகுதிப்பரீட்சையை வருகிற புரட்டாசிமாதம் பரீட்சைப்பகுதி நடத்தவிருக்கின்றது. பிறகுவருடம் இருமுறை இத்தகுதிப்பரீட்சை நடத்தப்படும். எழுத்துப் பரீட்சையிலும், வாய்மூலப்பரீட்சையிலும் 50சதவீதம் புள்ளிகள்பெற்றவர்களே பரீட்சையில் தேறியவர்களாகக் கருதப்படுவார்கள்.

டக்ரின் இடமாற்றம்

சமீபகாலம்வரை திருகோணமலை மாவட்டவைத்திய அதிகாரியாய் இருந்துவந்தவரான டக்ரர் எம். கனகரத்தினம் அவர்கள் சுகாதாரசேவைகளின் தலைவராக யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

அஹிம்சா வார அனுசாரம்

1925-ம்ஆண்டிலே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட அஹிம்சாவாரம்வீழமைபோல அடுத்தவைகாசிமாதத்தின் முதல்வாரத்தில் அனுட்டிக்கப்படவிருக்கிறது. அவ்வாரத்திலே மூன்றுகாரியங்கள் முக்கியமாகக் கவனிக்கப்படும். (1) இலங்கையிலே ஆடுமாடுகளை உணவுக்காகவெட்டுவதை விலக்குவது. (2) தாவரபோசனத்தை மாத்திரமே உண்பது. (3) பகல் 11-30மணிக்கும் 1மணிக்குமிடையே மிருகங்களால் இழுக்கப்படும்வண்டிகளிலே பிரயாணஞ்செய்வதை நிறுத்தி அந்தஒன்றரைமணிநேரத்திலும் அம்மிருகங்களுக்கு இளைப்பாற்றி கொடுப்பது. இன்னும்ஒன்று அஹிம்சாவாரத்தை அனுட்டிக்கும்படி அகிலமுழுவதும் பிரசாரஞ்செய்வது.

கள்ளத் தபால்முத்திரைகள்

போஸ்ற்மாஸ்ற்ர்ஜெனறல்சென்றவியாழக்கிழமை பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அதிலே அவர் தெரிவித்திருப்பதாவது: தபால்களில் கள்ளமுத்திரைகள் ஒட்டப்பட்டிருக்கின்றனவா என்று கவனமாகப் பார்த்துக்கொள்ளுமாறு தபால்பகுதியைச்சேர்ந்த சகலஊழியர்களும் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். அவ்விதம் கள்ளமுத்திரைகள் ஒட்டப்பட்டதபால்களைக் கண்டுபிடித்தால் அவைகளைப் போஸ்ற்மாஸ்ரரிடம் கையளிக்கவேண்டும். அவர் அவைகளைக் கொழும்புக்கு அனுப்பிவைப்பார்.

அரசாங்கம் பத்திரிகைகளைஎடுப்பது ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல

"ஓர் அரசாங்கமானது தனது நாட்டிலுள்ள ஒரு பத்திரிகைக்கு வாய்ப்பூட்டு இடுதலோ, அதை ஒழித்துக்கட்டுதலோ, அல்லது எடுத்துக்கொள்ளுதலோ உலகில் ஜனநாயக ஆட்சிமுறையில் நம்பிக்கையுள்ள எல்லோருக்கும் ஓர் எச்சரிக்கையாய் விளங்கவேண்டும்."

இவ்வாறு ஸ்கொட்ஸ்மன் என்னும் பிரித்தானிய பத்திரிகைஆசிரியர் அண்மையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

"நோக்கங்களில் கபடமில்லாதிருப்பின் ஓர் அரசாங்கமும் இப்படிச் செய்யமாட்டாது என்பது உலக அனுபவம். சரித்திரம் இதற்குச் சான்று பகர்கின்றது. தன்மேற் கண்டனங்கள் கூறப்படுவதை ஓர் அரசாங்கமும் தடுக்கப்படாது. கண்டனங்களுக்குப் பயப்படும் அரசாங்கத்திடம் ஒழித்து மறைத்துவைப்பதற்கு ஏதோ இருக்கவேண்டும். இலங்கை அரசாங்கமானது தனது முறைகளுக்கு எதிர்ப்புக் கூறிய பத்திரிகைகளை எடுத்துக்கொள்ளும் முயற்சியைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. இதைக்காணும் எவரும் இலங்கையின் எதிர்காலத்துக்காகத் துக்கங்கொள்ளாதிருக்கமுடியாது.

"இலங்கை அரசாங்கம் பத்திரிகைகளை எடுக்கத் தீர்மானித்திருக்கிறதென்ற செய்திபரவினதும், பிரித்தானிய பத்திரிகைகள் ஆட்சேபம் தெரிவித்தன. அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் ஆங்கில பத்திரிகையாளர் தமது நோக்கத்தைத் தப்பாக விளங்கிக்கொண்டார்களென்றும், இலங்கையிலே பத்திரிகைகள் ஒருசிலரின் சொந்தமானதினால் அன்னரின் அபிப்பிராயங்கள் பொதுஜனங்களின்மேல் திணிக்கப்படுகின்றனவென்றும், இக்குறையைத்தீர்க்க அப்பத்திரிகைகளைச் சொந்தக்காரரிலிருந்து பொதுஜன சொத்தாக்குவதே உகந்ததெனவும் அபிப்பிராயந் தெரிவித்திருந்தார்.

"அரசாங்கத்தின் நோக்கம் எதுவாயினும், வெளியுலகம் அவர்களின் செயல்களிலிருந்தே அவர்களின் தன்மையை அறிந்துகொள்ளும். அரசாங்கம் விரும்பியவற்றையே பத்திரிகைகள் கூறுவதும், விரும்பாதவற்றைத் தவிர்ப்பதுமானமுறையை ஜனநாயக உலகம் ஏற்றுக்கொள்ளமாட்டாது. தற்போது இலங்கையிலுள்ள பத்திரிகைகள் அரசாங்கத்தின் போக்கையும், கொள்கைகளையும்பற்றி அரசாங்கம் விரும்பக்கூடிய முறையில் பிரசாரஞ் செய்யாவிடில், 'ஜனநாயகமுறையில் அரசாங்கம்செய்யக்கூடியது ஒன்றேயொன்றுண்டு: தாம் பத்திரிகைகளை நிறுவிப் பொதுஜன ஆதரவைப்பெற்றுக்கொள்வதேயாம். பொதுஜனங்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களாயின் மறு பத்திரிகைகள் ஆதரவாளர்களின்றி விரைவில் மறைந்துவிடவும்கூடும்.

"இலங்கைப் பத்திரிகைகளில் தற்போது சில குறைபாடுகளிருக்கலாம். தமது செல்வாக்கைச் சிலசமயங்களில் தப்பிப்பிரயோகம் செய்துமிருக்கலாம். ஆனால், இதற்கெல்லாம் பரிகாரம் பொதுஜன அபிப்பிராயத்திலேயே தங்கியிருக்கின்றது. இக்குறைபாடுகளை உண்மையான ஜனநாயக முறையில் இலங்கை அரசாங்கம் தீர்த்துவைக்க முன்வருவதைவிட்டு, பத்திரிகைகளைத் தாம் எடுத்துப் பொதுஜன சொத்தாக்குவது ஒருசிறிதும் உகந்ததல்ல."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி பூசை வழிகாட்டி

அடையாளங்களின் விபரம்

† கடன் திருநாள் — மா. மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம்
1 1-ம் வகுப்புத் திருநாள் — ம. மரித்தோர் பூசையைத் தெரியலாம்
2 2-ம் வகுப்புத் திருநாள் — (வி. ம.) பூசையில் விசுவாசமந்திரம்
பே. பேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் — ஒ. ஒருசந்தி நாள்

சித்திரை மாதம்—1961

30 ஞா. 2 பாஸ்காவின்பின் 4-ம் ஞாயிறு (வி. ம.) [வெ.]

வைகாசி மாதம் — 1961

1 தி. 1 தொழிலாளரின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் (வி.ம.) [வெ]
2 செ. அர்ச். அத்தனசியார் [வெ]
3 பு. காலகினம் (ஞாயிறுபூசை; அர்ச்.அலெக்சாந்தர் தோழர் ஞா) [வெ]
4 வி. அர்ச். மொனிக்கம்மாள் [வெ]
5 வெ. பே. அர்ச். 5-ம் பத்திநாதர் [வெ]
6 ச. மரியாயின் சனி [வெ]

சத்திய வேத
பாதுகாவலன்
1961-ம் ஆண்டு
சித்திரைமாதம் 29-ந் திகதி

மேதினம்—தொழிலாளியான அர்ச். சூசையப்பர்தினம்

மேதினம் — அதாவது தொழிலாளர்தினமென அறியப்படுகின்ற வைகாசிமாதம் 1-ந் திகதியாகிய வருகிற திங்கட்கிழமை வழமைபோலக் கத்தோலிக்க உலகமுழுவதிலும் தொழிலாளியான அர்ச். சூசையப்பர்திருநாள் கொண்டாடப்படவிருக்கிறது. அதனில், அன்றையதினக் கொண்டாட்டம் முழுவதுக்கும் நடு நாயகமாக விளங்கப்போகிறவர் ஒரு தொழிலாளியும், தொழிலாளரின் பாதுகாவலரும். அவர்களின் முன்மாதிரிகையுமான அர்ச். சூசையப்பரே. அவர் மன்னர் தாவீதனின் மகிமைவாய்ந்த கோத்திரத்தில் உதித்தவர். ஆனால், காலகதியிலே அம்மன்னனின் அரசகோத்திரத்தினின்றும் இராச்சியபாரம் அகன்றுவிடவே, அவரது கோத்திரத்தார் அனைவரும் உலக செல்வபாக்கியங்களை இழந்து தாரித்திரகோலமாயினர். அதனால் அர்ச். சூசையப்பரும் தாரித்திரத்தில் பிறந்தார். கஷ்டப்பட்டுக் கைத்தொழில்செய்து வாழ்க்கைநடத்திவந்தார். அவரது வாழ்க்கையில் எவருமே பிரமிக்கத்தக்க காரியங்கள் எதுவும் நிகழவில்லை. மக்களின் உளத்தைக் கவரக்கூடிய மகத்தான சம்பவங்கள் எதுவுமே நிகழ்ந்ததில்லை. அவரில் காண்பது ஒருசாதாரண தொழிலாளியின் வாழ்க்கையல்லாது வேறொன்றுமில்லை. சர்வேசுரன் மனிதருக்குக்கொடுக்கக்கூடிய அதிமகத்தான ஒருபதவியைக் கொடுத்திருந்தபோதிலும் அவருக்கு உலக பாக்கியங்களையோ, அன்றேல் மகிமை சலாக்கியங்களையோ கொடுத்தவரல்ல. அவரும் தமது தாரித்திரத்தை நினைந்து ஒருபோதுமேகஸ்தியப்பட்டவருமில்ல, முறையிட்டவருமல்ல அதுவே தேவசித்தமெனக் கண்டு, அதற்கு எப்போதும் அமைந்தமனதோடு சந்தோஷமாய் இருந்துவந்தார். தாரித்திரத்தையும், துன்பத்தையும், தாழ்மையையும் நேசித்து, அவற்றைப் போதித்து மகிமைப்படுத்திய தேவதிருச்சுதனே அவரோடு வேலைசெய்து வந்திருக்கும்போது, அவரைப்பார்ப்பதும், அவரோடிருப்பதும், அவருக்கும், அவர் திருத்தாயாருக்குமாக அவரோடு வேலைசெய்வதும் அர்ச். சூசையப்பருக்கு இந்தஉலகிலேயே மோட்சானந்த பாக்கியமாயிருந்தது.

அர்ச். சூசையப்பர் தமது வருங்காலத்தைத் தேவதிருக்கரங்களில் அர்ப்பணித்துச் சிரமத்தைப் பாராது கடுமையாக உழைத்துவந்தார். கன்னிமரியாயின் ஒவ்வொரு வார்த்தையும், திவ்வியயேசுவின் ஒவ்வொரு பார்வையும் அவரது உழைப்பைக் கண்காணித்துவந்தன. ஆகவே, எவ்வளவோ கவலைநிறைந்த சந்தர்ப்பங்களிலும், கஷ்டமிகுந்த வேலைகளிலும் அவர் மனஞ்சோராமடைந்தார். பூரணகர்ப்பவதியான தமது திருப்பத்தினியை நசரேத்திலிருந்து பெத்லகேமுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் — பெத்லகேம் நகரிலே கடுங்குளிர்காலத்தில் தங்குவதற்கு இடந்தருமாறு இரந்துகேட்டலிலும் அது கிட்டாமற்போனதில் — தேவகுமாரன் ஈனமாட்டுக்கொட்டிலிலே பிறக்கநேர்ந்ததில் — பாலகயேசுவையும், கன்னிமரியாயையும் இரவிரவாக எகிப்துதேசத்திற்குக் கொண்டுசெல்வதில் அவர் எத்துணை பெரும்கஷ்டமும், கவலையும் அடைந்திருப்பார்? ஆயினும்அவர் மனம் சோர்ந்தவருமல்ல, மனம்பேதலித்துப் பின்வாங்கியவருமல்ல. தேவபராமரிக்கையில் நம்பிக்கைவைத்து, மனந்திடத்தைக் கைவிடாது தேவசித்தப்படி நடந்துகொண்டார். அதனால் சகலதொழிலாளிகளும் பலவித சங்கடங்களும், சஞ்சலங்களும் தங்களை எதிர்கொண்டுவரும்போது அர்ச். சூசையப்பரைக் கண்டுபாவித்து, தங்கள் பாதுகாவலரான அவரின் ஒத்தாசையைத் தேடும்போது அவர்கள் மனச்சாந்தியையும், வாழ்க்கையில்வெற்றியையும்கண்டுகொள்வார்கள். ஏனெனில், தேவதாயாருக்குப்பின் தேவசிம்மாசனத்தருகில் வீற்றிருக்கும்அவர் எமக்காகச்செய்யும்மன்றாட்டு அதிக வல்லபமுடையதாகும்.

தொழிலாளராகிய தங்களுக்கெல்லாம் வல்லபமிக்க ஒருபாதுகாவலரும், நல்லமுன்மாதிரிகையும், வாழ்க்கையிலேயே தங்கள் கஷ்டநஷ்டங்கள், வறுமைசிறுமைகளை நன்கறிந்தவருமான தொழிலாளிஒருவர் இருக்கின்றார்; அதனால் அவருடைய பாதுகாவலைஇரந்து, அவரது மாதிரிகையைக்கண்டுபாவிக்கவேண்டுமென்ற ஒரு புத்துணர்ச்சியைத் தொழிலாளரிடையே பிறப்பித்துவிட்ட தொழிலாளியான அர்ச். சூசையப்பர் திருநாளை மேதினமன்று நாம் கொண்டாடக்கிடைத்தமை ஒருபெரும்பாக்கியமே. தம்முடைய திருமகனுகிய திவ்வியயேசுவை முகக்கண்முன்பாகமாத்திரமல்ல, மனக்கண்முன்பாகவுமேவைத்து, சுமார் முப்பதுஆண்டுகள்வரை அவருக்கும், அவர் திருத்தாயாருக்குமாகத் தமதுவாழ்க்கையை அர்ப்பணஞ்செய்து, அவர்களை வாழவைப்பதற்காகவே தாம்வாழ்ந்து, நெற்றியியர்வை நிலத்திற்சிந்தக் கஷ்டப்பட்டுழைத்துவந்து அவர்களின் பேரன்பைப் பெற்றவரான — என்றைக்கும் அவர்களின் பெருநன்றிக்குப் பாத்திரரான இந்தத் திருமாதவனுர் திவ்வியயேசு பக்கத்தில் நின்று துணைச்செய்யத் தச்சுத் தொழில்நடத்தும் பாவனையாக அமைந்துள்ள பட்டமொன்றை ஒவ்வொருதொழிலாளியும் தனது இல்லத்திலோ அன்றேல் தொழிற்சாலையிலோ ஸ்தாபித்து, மனக்கண்முன்பாக அவரைவைத்து, அல்லும்பகலும் அவருடைய பாதுகாவலை இரந்து அயராதுவேலைசெய்துவரும்போது அவர்களுடையவேலை ஆசீர்வதிக்கப்பட்டதாயும், அதிகம் பலன்அளிப்பதாயும் இருக்குமன்றே!

தொழில் துன்பத்தின் ஊற்று, அன்றேல் இன்பத்தின் பாதையா?

இன்றைய உலகிலே, மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் வையகத்திலே, தொழில், பழங்காலத்திலும் பார்க்க முக்கியநிலையைப் பெற்றுள்ளது. மனுநூலோர், 10,000ஆண்டுகட்கு முன்பே மனிதர் இவ்வுலகில் வாழ்ந்தனரெனக் கூறுகின்றனர். ஆயின் இன்றைய தொழிலாளர் வர்க்கத்தினர் தோன்றியது கிட்டத்தட்ட 150 ஆண்டுகட்கு முன்பே. 1769-ம் ஆண்டு யேம்ஸ் உவாட் எனும் அறிவியலறிஞர் நீராவிப்பொறியைக் கண்டுபிடித்து, புத்துலகிற்கு வழிகாட்டினர். இதனால் பலதொழிற்சாலைகள் பெருக, அவற்றில் வேலைசெய்யும் தொழிலாளரும் மிகுந்து, தொழிற்சாலையருகே வந்துகுடியேறினர். நகரங்களும், செல்வம் கொழிக்கும் பட்டணங்களும் மிகுந்தன. தொழிலாளர்வர்க்கம், தொழிலாளர் பிரச்சனை, தொழிற்சங்கங்கள் தோன்றின. இவைகள் பொதுவுடைமை, சமத்துவதத்துவங்கட்கு அப்பாற்பட்டவை.

சில ஆண்டுகட்குமுன் இளம்கத்தோலிக்க தொழிலாளர்சங்கம் அமெரிக்காவில் தொழிலாள இளைஞர்கள் தொழிலைப்பற்றி யாது நினைக்கின்றனரென ஆய்ந்தறிய முற்பட்டது. 90% பணத்திற்காகவே வேலைசெய்வதாகக் கூறினர். "எவ்வளவு வேலையைக் குறைத்துச் செய்யமுடியுமோ அவ்வளவிற்குக் குறைத்துச்செய்து, எவ்வளவு பணம்பெற முடியுமோ அவ்வளவு பணத்தைப் பெறுவதே அவர்களது மனப்பான்மை. அதற்காக அவர்கள் எவ்வகை வேலையையும் செய்யத் தயாராயிருந்தனர். ஆயின், இன்றைய நம் தமிழ்மக்கள் இதிலும் மோசமான நிலையிலுள்ளனர். அவர்கள் எவ்வகை வேலையையும்-தொழிலையும் செய்யத் தயாராயில்லை. சாதிவெறியில் மூழ்கியிருந்த தமிழன், இன்னும் அதை முற்றுக முறித்தெறியத் துணிவின்றிச் சிலதொழில்கள் தாழ்ந்த வகுப்பினர்க்கென்றும், சில தொழில்கள் மேல்வகுப்பினர்க்கென்றும் பிரிக்கும் மனப்பான்மையிலுள்ளான்.

தொழிலைப்பற்றிய கத்தோலிக்க கருத்து

"பறவைகட்குப் பறப்பது எங்ஙனம் இயற்கையோ அங்ஙனமே மனிதனுக்கு வேலை." பணத்திற்காக வேலை செய்வது பிழையல்ல; ஆனால், பணத்திற்காகமாத்திரம் வேலைசெய்வது பிழையிலும்பிழை. மனிதன் "நடக்கும் வயிறு"மாத்திரமல்ல, அவனுக்கு ஓர் ஆன்மாவும் உண்டு. கிறீஸ்து மனிதஅவதாரம் எடுக்குமுன், உலகிலே, சரீரவேலை அடிமைகட்கு மாத்திரம்; அவர்கள் இரத்தத்தைப் பிளிந்து உல்லாசமாய் உட்கார்ந்து, உண்டுகளிப்பது பிரபுக்கட்குஅழகு எனும் எண்ணம் பரவியிருந்தது. கிறீஸ்துவம் அதை உடைத்தெறிந்து, மனிதனது வேலைக்கு வேண்டிய உயர்வை அளித்தது. ஆயின் பொதுவுடைமையரின் உலோகாயதக் கருத்தைப்போன்று, தொழிலைத் தெய்வமாக்கவில்லை. மனிதனது இறுதி நோக்கமாகிய மோட்சத்திற்குத் தொழிலையும் துணையாக்க வேண்டுமென்பதையே கிறீஸ்துவம் விளம்புகின்றது.

இறைவன், உலகை இன்மையிலிருந்து உண்டாக்கியபொழுது, அதைக் கடுமுயற்சியாகத்தான் உண்டாக்கினர். மானிடர் அவரது வேலையைத் தொடர்ந்து நடத்தி, அவரது படைப்பை முற்றுப்பெறச் செய்யவேண்டுமென்பது கடவுளின் சித்தம். ஆதாம், சிங்காரத் தோட்டத்திலே, வேலையின்றி, லகவீசிஉலாவித் திரிந்தாரென்பது சிலரின் தப்பெண்ணம். ஆதாம், வேலை செய்வதற்காக, இறைவனது படைப்பைப் பக்குவப் படுத்துவதற்காக உண்டாக்கப்பட்டார். ஆதாமிற்கு ஒவ்வொரு சிறுவேலையும் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். ஒவ்வொரு வேலையும் எங்ஙனம் கடவுளின் திட்டத்திற் பொருந்துகின்றதென அறிந்திருந்தார். சென்மபாவத்தால் விளைந்த கேடுகள் வேலையின் அடிப்படை நன்மையை, இறைவனது படைப்பைத் தொடர்ந்து நடத்துதலை ஒழித்துவிடவில்லை. இப்பொழுதும் நாம் வேலையில் மகிழ்ச்சியுறலாம்.

வேலையிலிருக்கும் துன்பம் ஆதியில் இறைத்திட்டத்தில் இருக்கவில்லை. ஆயின் ஆதாம், பசாசின் சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டு இறைவனுக்குக் கீழ்ப்படியமறுத்துப் பாவம்செய்தார். இதனால் வந்ததண்டனைகளுள் வேலையிலிருக்கும் துன்பமுமொன்று. அடிமைகள் வேலைசெய்யப் பிறந்தவர்களென்றும், மற்றையோர் உண்டுகளிக்கப் பிறந்தவர்களென்றும் மனப்பான்மை எழுந்தது. இவ் அடிமைத்தனம் ரோமைநாட்டில்மாத்திரமல்ல,உண்மைத் தமிழ்ப்பண்பாடு நிறைந்த யாழ்ப்பாணத்திலுமிருந்தது. இரண்டும் கிட்டத்தட்ட ஒரேவகையானவையே. நம் நாட்டிலிருந்து அடிமை மனப்பான்மையை அழித்தெறிந்த ஆங்கிலேயர்க்கு நாம் நன்றிசெலுத்தியே. ஆகவேண்டும். ஞானஸ்நானம் தொழிலிலிருக்கும் துன்பத்தைக் குழுவுவதில்லை. பொதுவுடைமையாளரின் "இவ்வுலக மோட்சம்" ஒரு பொய்ப்புனைவன்றி வேறல்ல.

இறைமகன் யேசு விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்குவந்து, பாடுபட்டு, உலகை ஈடேற்றினர். எங்களை ஈடேற்றியபொழுது எங்களது தொழிலையும் ஈடேற்றினர். மனிதன் பேரின்ப, என்றுமுள்ள வாழ்விற்காகப் படைக்கப்பட்டவன். கடவுள், எங்கள் தொழிலை இரட்சித்து, அத்தொழிலை எங்கட்கு நித்தியவாழ்வைப் பெறும் வழியாகமாற்றினர். அன்று தொழில் துன்பத்தின் ஊற்று; இன்றோ அது பேரின்பத்தின்பாதை. ஆகையால், நாம் செய்யும் ஒவ்வொரு சிறுவேலையையும், நன்குசெய்து, நம்மைப்புனிதர்களாக்க வேண்டியது.

"சிறப்பொடு பூசனைசெல்லாதுவானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என வள்ளுவர் மழையில்லாவிட்டால் கடவுட்குப் பூசைசெய்யமுடியாது எனக்கூறுகின்றார். ஆயின், "சிறப்பொடு பூசனை செல்லாது 'வேலை' வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" என வேலையைப்பற்றியும் கூறலாம். இதனாலேயே "தொழிலாளரின் தந்தை" மொன்சிஞ்ஞோர் கார்டைன் "தொழிலில்லையென்கில் கோதுமையப்பமில்லை, ஒப்புக்கொடுக்க இரசமில்லை, பீடக்கல் இல்லை, திருத்துகில்களில்லை, கோயில் இல்லை, தொழிலின்றிச் சமயமில்லை" எனத் தொழிலின் பெருமையைப் போற்றுகின்றார்.

தொழிலாளரும் புனித வளனரும்

திருச்சபை, பலதிருநாள்கட்கும், நாட்டுவழமைகட்கும், கிறிஸ்துவ உயிர்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் பக்கம்

தொழிலாளரின் உரிமைச் சாசனம்

13-ம் சிங்கராய பாப்பரசரின் பொதுநிருபம்

(தொடர்ச்சி)

• 2-ம் பாகம்

தொழிற் பிரச்சினையும் திருச்சபையும்

2. தொழிலாளிகள் முதலாளிகள் கடமைகள்

(அ) ஒத்துழைப்பு அவசியம்

நாம் கவனித்துக் கொண்டுவரும் இந்த விஷயத்தில் பெரிய தவறான கொள்கை ஒன்று உண்டு. அதாவது, இயல்பாகவே ஒருவகுப்பார் மற்றொரு வகுப்பாருக்குப் பகைவர்; முதலாளிகளும், தொழிலாளிகளும் ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டுவது இயல்பு என்பதே. இவ்அபிப்பிராயம் பெரும் பிசகு; மதியீனமும்கூட. அதற்கு நேர்விரோதமான கொள்கையே உண்மையாகும். மனிதனுடைய அவயவங்கள் தக்க அளவோடு ஒன்றோடு ஒன்று பொருந்தி அழகான சரீரமாக விளங்குவதுபோல, ஒரு நாட்டில் முதலாளிகள் தொழிலாளிகள் என்ற இரு வகுப்பாரும் ஒருவரோடு ஒருவர் ஒன்றுபட்டு ஒற்றுமையாய் வாழ்ந்தால்தான் நாட்டின் புதுச் சீவியம் இனிது நடைபெறும். இந்த இருவகுப்பாரில் ஒருவர் உதவி ஒருவருக்கு அவசியம். தொழில் இல்லாமல் முதலினால் பயன் இல்லை; முதல் இல்லாமல் தொழிலும் பயனளிக்க மாட்டாது. இந்த இரண்டும் பரஸ்பரமாக ஒன்றித்திருந்தால்தான் ஒரு மேலான கிரமம் ஏற்படும். ஆனால், இவைகள் சதா வகுப்புக் கலவரத்தில் இறங்கிநின்றால் குழப்பமும், கொடுமையும் உண்டாவது நிச்சயம். இவ்வித வகுப்புவாதங்கள் ஏற்படாமல் தடுத்து அவற்றை வேரோடு களைவதற்குத் திருச்சபையில் பலவிதமான திறமை வாய்ந்த ஏற்பாடுகள் உண்டு. ஏனெனில், திருச்சபை தனவந்தரும் தொழிலாளிகளும் ஒருவர் ஒருவருக்குச் செய்யவேண்டிய கடமைகளையும், விசேஷமாய் நீதியைஒட்டிய அவர்களுடைய பொறுப்பையும் அவர்கட்கு ஞாபகப்படுத்தி, இருதரத்தாரையும் ஐக்கியப்படுத்தக்கூடிய ஒரு மத்திய தாபனமாய் இருக்கின்றது. இத்தகைய வேறொரு மத்தியதாபனத்தைக் காண்பதரிது.

(ஆ) தொழிலாளியின் கடமைகள்

தொழிலாளிகள் தாங்கள் சுயேச்சையாய் ஒப்புக்கொண்ட நியாயமான நிபந்தனைகளின்படி தங்கள் வேலையை நிதார்த்தமாகவும், திறமையாகவும் செய்துமுடிக்கவேண்டும். முதலாளியின் பொருளுக்கு நஷ்டமோ, அல்லது அவருக்கு வலுவந்தமான எவ்வித மரியாதைக்கேடோ வருவிக்கக் கூடாது. தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டு அவர்கள் பலாத்காரச் செயல்கள், ஒழுங்கீனமான நடத்தைகள், கலகங்களில் இறங்கிவிடக் கூடாது. தப்பிதமானகொள்கைகளைப் போதிப்பவர்களுக்கு அவர்கள் செவி சாய்க்கக்கூடாது. ஏனெனில், செய்ய முடியாத பெரியகாரியங்களையெல்லாம் சாதித்துவிடுவதாகச்சொல்லி அவர்கள் தொழிலாளிகளை ஏமாற்றுவார்கள். அவர்கள் கூற்றை நம்பித் தொழிலாளிகள் தீவிர நடவடிக்கைகளில் இறங்கினால், கடைசியாக அவர்கள் அடைவது மனவருத்தமும், பெரும் நஷ்டமும் தான். இவைகள் எல்லாம் வேதம் தொழிலாளிகளுக்குப் போதிக்கும் கடமைகளாகும்.

(இ) முதலாளியின் கடமைகள்

தனவந்தருக்கு வேதம் போதிக்கும் கடமைகளாவன: முதலாளிகள் தங்களின்கீழ் வேலைசெய்யும் தொழிலாளிகளை அடிமைகளாகக் கருதக்கூடாது. மனிதன் என்ற கண்ணியத்துக்கும், கிறீஸ்தவன்என்ற பெருமைக்கும் பங்கம் இல்லாத முறையில் அவர்களை நடத்தவேண்டும். நியாயப்படி பார்த்தாலும், கிறீஸ்தவ தத்துவமுறைப்படி பார்த்தாலும் வேலை இழிவான காரியமல்ல; அதற்குமாறாக அது பெருமைக்குரிய காரியமாகும். ஏனெனில், ஒருவன் நேர்மையும், கண்ணியமுமான வழியில் தனது சீவனோபாயத்தில் தேடிக்கொள்ள அது உதவுகின்றது. ஆனால், தொழிலாளி பணம்சம்பாதிக்க உபயோகிக்கப்படும் ஒரு மாற்றுப்பண்டம் அல்லது சொற்ப நிறையும், கொஞ்சச் சக்தியும் உள்ள வெறும் சடப்பொருள் என்று முதலாளி கருதி அவனை நடத்துவதுதான் பெரும் வெட்கத்துக்குரிய காரியம்; அது மனிதத் தன்மைக்கும் மாறானதாகும்.

மேலும் முதலாளி தொழிலாளியின் வேதம், ஆத்துமம் சம்பந்தமான காரியங்களையும் கருத்திற் கொள்ளவேண்டும் என்று திருச்சபை கற்பிக்கின்றது. ஆகையால், தொழிலாளி தனது வேதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முதலாளி அவனுக்குப் போதிய அவகாசம் கொடுக்கவேண்டும். அவன் ஆபத்தான சந்தர்ப்பங்களில் சிக்கிக் கெட்டுப் போகாமல்இருக்கவும், தனதுவீட்டையும் குடும்பத்தையும் கவனியாமல் சம்பளத்தை வீண்விரயம் செய்யாமல் இருக்கவும் முதலாளி அவனைக் கண்காணித்துக்கொள்ளவேண்டும்.

முதலாளிக்கு வேதம் போதிக்கும் கடமைகள் இவைமாத்திரமல்ல. முதலாளி தொழிலாளிகளின் சக்திக்கு மிஞ்சியவேலைகளை அவர்கள்மீது சுமத்தக்கூடாது; அவர்களுடைய வயதுக்கும், ஆண் பெண்என்ற தன்மைக்கும் ஏற்றபடியே அவர்களுக்கு வேலைகளைக் கொடுக்கவேண்டும். முதலாளியின் முக்கியமான பெரியகடமை யாதெனில் ஒவ்வொருவருக்கும் நீதியின்படி அவரவருக்குச் சேரவேண்டியதை அவரவருக்குக் கொடுத்துவிடுவதே. ஒருவருக்குக் கொடுக்கும் சம்பளம் நியாயமானதுதானா என்று தீர்மானிப்பதற்கு முன் அனேக விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்தல் அவசியம் என்பது உண்மையே. எனினும், தனவந்தரும் முதலாளிகளும் ஒருவிஷயத்தை அவதானித்தல் அவசியம். அதாவது, இலாபத்தை முன்னிட்டு ஏழைகளை, அனாதைகளை வருத்துவதும், அண்டி வந்தவனுடைய திக்கற்ற நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு இலாபம் சம்பாதிப்பதும் வேதப் பிரமாணத்தாலும், மானிட பிரமாணங்களாலும் கண்டிக்கப்பட்ட விஷயம். ஒருவனுக்குரிய சம்பளத்தை மோசம்பண்ணுவது பழிவாங்கும்படி பரலோகமட்டும் அபயமிடும் பாவமாகும். "இதோ உங்கள் வேலையாட்களுடைய கூலி உங்களால் வஞ்சிக்கப்பட்டுக் கூக்குரல் இடுகின்றது; அவர்களின்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிக்குள்புகுந்தது"

(யாகப்பர் 5 : 4).

கடைசியாக, தனவந்தர் தொழிலாளியின் சம்பளத்தை வலுவந்தமாகவோ, சூழ்ச்சியினாலோ, அல்லது அனியாயவட்டிபோட்டோ குறைக்கக் கூடாது. ஏனெனில், தொழிலாளி பெரும்பாலும் பலவீனன், ஆதரவற்றவன். [illegible] எவ்வளவு [illegible] வுக்கு அது பூசிதமாகக் கருதப்பட வேண்டும்.

இங்கு குறிப்பிடப்பட்ட கடமைகளை முதலாளிகளும் தொழிலாளிகளும் அனுசரித்துவந்தால் சகல கலகங்களையும், அவற்றின் காரணங்களையும் [illegible]. அது ஒன்றே போதும் [illegible] வெள்ளிடைமலை.

தொழிலாளரின் பாதுகாவலராம்

அர்ச். சூசையப்பர் பேரில்

பரிசுத்தபிதா இயற்றிய செபம்

மகிமை நிறைந்த பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! நசரேத்தின் தாழ்மையும், நேர்மையுமுள்ள தொழிலாளரே! ஊக்கமுள்ள முயற்சியாலும், யேசுவுடனும், மரியாயுடனும் கொண்ட ஆச்சரியமான ஐக்கியத்தாலும் பூரணமாக்கப்பட்ட வாழ்க்கையின் மாதிரிகையைச் சகல கிறீஸ்தவர்களுக்கும் — சிறப்பாக எமக்கும் தந்தருளியவரே! எமது அனுதின உழைப்பில் உதவியளித்துக் கத்தோலிக்க தொழிலாளராகியநாமும் தேவனைத் தோத்திரிப்பதும், எம்மை அர்ச்சிப்பதும், நாம் வாழும் சமூகத்துக்குப் பயன்படுவதுமாகிய எமது முயற்சிகளின் உச்சித லட்சியங்களை நாம் அடையச் செய்தருளும்.

எமது அதிபட்சம் நிறைந்த பாதுகாவலரே! தாழ்மை நிறைந்ததும், களங்கமற்றதுமான இருதயத்தையும், எங்கள் தொழிலில் பற்றுதலையும், உடன் தொழிலாளர் மட்டில் நேச பான்மையையும், பூலோக வாழ்க்கையின் தவிர்க்க முடியாத துன்பங்களில் தேவசித்தத்துக்குப் பணிவையும், அவைகளைச்சகிப்பதில் சந்தோஷத்தையும், சமூகத்திற்கு நாம் செய்யவேண்டிய சிறப்பான தொண்டைப் பற்றிய உணர்வையும், எமது கடமைப்பாட்டின் பொறுப்பையும், கட்டுப்பாட்டுக்கு அமைந்த போக்கையும், செபப் போக்கையும், எசமான்கள் மட்டில் அமைச்சல் மரியாதையையும், உடன் தொழிலாளர் மட்டில் சகோதர பான்மையையும், எம்மைச் சார்ந்தோர் மட்டில் அன்பையும், தயைதாட்சணியத்தையும் எமக்கு ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுத்தந்தருளும்.

எமது தொழிலின் பலனை நேர்மையாய் அனுபவிக்கும்படியாக யாவும் அனுகூலமாயிருக்கும் சுபீட்ச காலத்தில் எம்முடன் இருந்தருளும். வானமே இடிந்து எம்மை அமுக்குவது போலவும், நாம் கையாளும் தொழிற் கருவிகளுங்கூட எம்மை எதிர்ப்பது போலவும் துன்பம் வந்துற்ற காலத்திலே எமக்கு ஆதரவாயிரும்.

உம்முடைய எளிய பட்டறையின் ஓர் மூலையில் அமைதியாய் அமர்ந்து நூல்நூற்றுப் புன்னகை ததும்பிய முகத்தினளாயிருந்த மிகவும் இனிய உமது பத்தினியும், எங்கள் திருத்தாயாருமான மரியன்னையை உமது மாதிரிகைப்படி நாம் என்றும் தண்டுபாவிக்க அருள்புரிந்தருளும். உம்மோடுகூடத் தச்சப்பட்டறையில் உழைத்த யேசுவிடமிருந்து எமது பார்வை அகலாதிருக்கச் செய்தருளும். இவ்விதமாய்ச் சதாகாலமும் எம்மை மோட்சத்தில் காத்திருக்கும் நித்திய பேரானந்த வாழ்வுக்கு அச்சாரமாகப் பூலோகத்தில் நாம் சாந்தியும், பரிசுத்தமுமான வாழ்க்கை நடத்திவரச் செய்தருளும்.

ஆமென்.

அதிவண. லோங் சுவாமியார் கடும் நோயால் வருந்துகின்றார்

சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய அதிபரான அதிவண. T. M. F. லோங், O. M. I. சுவாமி அவர்கள் அண்மையில் அவுஸ்திரேலியாவிலிருந்து தமது நாடாகிய அயர்லாந்துக்குத் திரும்பிச்செல்லும்வழியில் யாழ்ப்பாணத்தையும் தரிசித்து விட்டுச் சென்றார். அவர் சடுதியாகக் கடும் நோய்கண்டு இப்போது இலண்டன் மாநகரில் வைத்திய சிகிச்சை பெற்றுவருகிறார். அவருடைய நிலை கவலைக்குரியதாயிருக்கின்றது என்று தெரியவருகிறது. அவர் பூரண சுகமடைய மன்றாடும்படி கல்லூரிப் பழைய மாணவர்களும், அவருடைய சிநேகிதர்களும் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். ஆரோக்கியமாதா, அர்ச். யூதாததேயு, அர்ச். சூசையப்பர் ஆகியவர்களின் மன்றாட்டினாலும் எனக்குவந்த இருதயநோய் பூரணசுகமாகி எனக்குத்திரும்பவும் எனது வேலை கிடைக்கப்பெற்றேன். இவர்களின் நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

பெரியமடு. எஸ். சி. சி.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. M.B. 2705

ஸ்ரான்லிவீதி, வண்ணார்பண்ணை கிழக்கு

1. தம்பு இரத்தினசிங்கமும்
2. பெண் மங்கையற்கரசியும்.

— வழக்காளிகள்.

எதிராக

புகையிரதவீதி சிறும்பியடி
வண்ணார்பண்ணை கிழக்கு
சின்னத்தம்பி மார்க்கண்டு

— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2705-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1961-ம் ௵ வைகாசி ௴ 16-ந்௳ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: ரூபா 2,500|=

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்குஇறை "பாணன்காடு" பர. நில. இலா. 2½யும், புதுவீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு— சின்னத்தம்பிச்செட்டி சீனியரின் உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு— வயித்திலிங்கம்செட்டி கிட்டினசாமிச்செட்டியின் ஆதனம். மேற்கு— புகையிரதவீதி தெற்கு— ஒழுங்கை. இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம் 45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 22-3-61

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இல்லறத் திருத்தொண்டர் பக்கம்

தென் அமெரிக்க நாடுகளின் அவசர தேவை — இல்லறத் திருத்தொண்டர்

"தென் அமெரிக்க நாடுகள் யாவும் பெரும்பாலும் கத்தோலிக்க நாடுகள் என்பது உலகம் அறிந்த விஷயம்; ஆனால், அந்நாடுகளை இப்போது எதிர்நோக்கி நிற்கும் பெரும் ஆபத்து கொம்யூனிசமே."

இவ்வாறு "புது உலகை உருவாக்கும் இயக்கத்தை" ஆரம்பித்தவரும், பேசுசபையைச் சேர்ந்தவருமாகிய **அதிவண. லிக்காடோ லொம்பாடி** சுவாமியார் அவர்கள் அண்மையில் கூறியுள்ளார். தென் அமெரிக்க நாடுகளை அவர் பலமுறை தரிசித்து, அந்நாடுகளின் நிலையை நன்கு ஆராய்ந்து அறிந்ததின் பின்னரே இவ்வாறு கூறியுள்ளார். மேலும் அவர் கூறியதாவது: "தென்னமெரிக்க நாடுகளில் பொது உடைமைவாதம் இலகுவாய்ப் பரவுவதற்குச் சாதகமான சூழ்நிலை உண்டு. ஒருபுறத்தில் ஒருசில தனவந்தர் சகலவித சமூக வசதிகளையும் அனுபவித்துவருகின்றார்கள். மறுபுறத்தில் பெருந்தொகையான பொதுமக்கள் வறுமையினால் வாடுகின்றனர்; கல்வி வசதியின்றி வருந்துகின்றனர்.

இச்சூழ்நிலையைப் பயன்படுத்தும்படி சோவியற் அரசாங்கம் மொஸ்கோவில் வெளிநாட்டு இளைஞர்கட்கு, விசேஷமாகத் தென்னமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் வாலிபர்களுக்கு, கொம்யூனிசத்தில் பயிற்சி அழிக்கும்பொருட்டுச் சிகேகிதப் பல்கலைக்கழகமொன்றை நிறுவியுள்ளது. அங்கு 4,500 பட்டதாரிகளை ஆயத்தப்படுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுவருகின்றன. தென்னமெரிக்க நாடுகளில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு விசேஷ சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இவ்வருடம் 20,000-க்கு அதிகமான மாணவர்கள் தென்னமெரிக்க நாடுகளில் இருந்து அப்பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்தார்கள் என்று தெரியவருகிறது. அவர்களுள் 2,000-க்கு மேலானோர் அனுமதிக்கப்பட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பொறியியல், வைத்தியம், விவசாயம், பௌதிகம், பொருளாதாரம், முதலிய துறைகளில் பட்டம்பெற்றுத் தங்கள் சொந்தநாடுகளுக்குத்திரும்பி வந்து கொம்யூனிசத்தைப் பரப்புவதற்குப் பெரும் உதவிசெய்வார்கள் என்று சோவியற்ரூஷியா எதிர்பார்க்கின்றது.

கொம்யூனிசத்தை எதிர்க்கக்கூடிய ஒரேஒரு ஸ்தாபனம் கத்தோலிக்க திருச்சபையாகும். அதற்கு இப்போது அதிகசெல்வாக்கு உண்டென்பது உண்மையே. ஆனால், எதிர்காலத்தில் வெவ்வேறு துறைகளில் தலைமைவகிக்கக்கூடிய உத்தம கத்தோலிக்க பட்டதாரிகளை உடனடியாக ஆயத்தப்படுத்தாவிடில், பொது உடைமைக் கெடுபிடியில் இருந்து தென்னமெரிக்க நாடுகள் தப்பிக்கொள்வது மிகவும் கஷ்டமாகவே இருக்கும். இதற்கு இல்லறத் திருத்தொண்டர் இயக்கத்தை அபிவிருத்தி செய்வதே தற்போது மிகவும் அவசியமான காரியமாகும். சிறந்த கத்தோலிக்க பட்டதாரிகளைப் பயிற்றுவதற்கு எல்லாத் தென்னமெரிக்க நாடுகளுக்கும் பொதுவான மத்திய பல்கலைக்கழகமொன்று தாமதமின்றி ஏற்படுத்தப்படவேண்டும். இப்போதுள்ள பல்கலைக்கழகங்களில் ஒன்றை இக்கருத்துக்கிணங்க மாற்றி அமைப்பதே இலகுவான வழியாகும். இப்பல்கலைக் கழகத்துடன் இல்லறத் திருத்தொண்டரைப் பயிற்றும் கலாசாலை ஒன்று இணைக்கப்படுதல் அவசியமாகும். இத்தாலியில் பீசா என்னும் பட்டணத்தில் நிறுவப்பட்டிருக்கும் இல்லறத் திருத்தொண்டர் பயிற்சிக் கழகத்தைப் போன்று, அங்கும் தகுதிவாய்ந்த இல்லறத் திருத்தொண்டர் குறைந்த செலவில் அல்லது மேற்றிராசனங்களின் பொறுப்பில் வெவ்வேறு துறைகளில் பயிற்றப்பட்டுப் பட்டதாரிகள் ஆவதுடன் திருப்பணி செய்வதற்கும் நன்கு ஆயத்தப்படுத்தப்படல் அவசியமாகும். இது மிகவும் காத்திரமான தேவையாய் இருப்பதால் பல்கலைக் கழகக் கலாசாலைகளை நடத்தும் துறவற சபையினர் முன்வந்து தங்கள் கலாசாலைகளில ஒன்றை இத்தேவையைப் பூர்த்திசெய்வதற்கு அர்ப்பணித்து உதவுதல் மிகவும் விரும்பத்தக்க ஒரு திருப்பணியாக இருக்கும் என்று லொம்பாடி சுவாமியார் குறிப்பிட்டார்.

—(:)—

நியூகினிக்குச் செல்லும் இல்லறத் திருத்தொண்டர்

அமெரிக்காவில் கிளீவ்லண்ட் என்னும் பட்டணத்தில் வாழ்ந்துவந்த வில்லியம் ஓ லொக்கிளினும், அவருடைய பாரியாரும் தங்கள் மூன்று பிள்ளைகளுடன் நியூகினி தேசத்தில் இல்லறத்திருத்தொண்டாற்றும்படி தங்கள் நாட்டையும், பட்டணத்தையும்விட்டுப் புறப்பட்டுள்ளனர். திரு. வில்லியம் அவர்கள் ஓர் கட்டிடச்சிற்பி. கோயில்கள், பள்ளிக்கூடங்கள், மடங்கள் முதலிய வேதக்கட்டிடங்களை நிறுவுவதற்கு உதவிசெய்யும்படியே அங்கு செல்லுகின்றார். அவருடைய மனைவி லிகிதர் வேலையில் ஈடுபடுவார். திரு. வில்லியம் தாம் ஒரு வருடத்தில் பெற்றுவந்த 2,500டொலர் சம்பளத்தைத்துறந்து சுவிசேஷத் தொண்டாற்றும்படி நியூகினி தேசத்துக்குப் புறப்பட்டுள்ளார். கத்தோலிக்க பிரசுரங்களை அதிகமாகப் படித்திருப்பதாலேயே புதுவேதநாடுகளுக்குச் சென்று உதவிபுரிய அவர்கள் தீர்மானித்தனர். சில வருடங்கள் நியூகினி தேசத்தில் தொண்டாற்றியபின் தாயகம் திரும்புவார்கள். தங்கள் குடும்பங்களின் தாபரிப்புப் பற்றியோ, பிள்ளைகளின் கல்வியைப்பற்றியோ, தாயகம்திரும்பியபின் தங்களுடைய நிலைபற்றியோ அவர்களுக்கு எவ்வித கவலையும் இல்லை. எல்லாவற்றையும் நல்லதேவன் பார்த்துக் கொள்ளுவார் என்ற உறுதியான நம்பிக்கையுடனே நியூகினி தேசத்தில் இல்லறத்திருத்தொண்டாற்ற அவர்கள் துணிந்து செல்லுகின்றனர்.

இந்தியாவின் மனந்திரும்புதலுக்காக உழைக்க ரோமையில் ஓர் புதிய உலகொளி தாபனம் நிறுவப்பட்டுள்ளது

இந்தியாவின் மனந்திரும்புதலுக்குத் தேவையான இல்லறத் திருத்தொண்டர்களை நன்கு பயிற்றும் பொருட்டு ரோமாபுரியில் பல்லொற்றீனி சுவாமிமாராலும், கன்னியர்களாலும் ஓர் விசேஷதாபனம் சென்றவருடம் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து அனுப்பப்படும் மகளிர் இத்தாபனத்தில் சேர்ந்து பயிற்சிபெறுவர். சிலவருடங்களுக்குமுன் துறவறக் கன்னியருக்கு வேதசாஸ்திரம் கற்பித்துப் பட்டம்அளிப்பதற்கென நிறுவப்பெற்ற "உலகஇராக்கினி" என்ற கல்வித்தாபனத்தில் அவர்கள் சேர்ந்து வேதசாஸ்திரம்கற்றுப் பட்டம் பெறவசதியும் அளிக்கப்படும். இத்துடன் அவர்கள் கிறிஸ்தவ சாங்கோபாங்கத்திலும், சுவிசேஷத்தொண்டு செய்யும் முறைகளிலும் பயிற்றப்படுவர். இப்புதிய தாபனம் ஓர் துறவறசபையன்று. அதற்கு உலகொளிதாபனம்என்ற பெயரே பொருத்தமானது. இத்தாபனத்தின் உறுப்பினர் தனித்தமுறையில் குறிக்கப்பட்ட காலத்திற்கு கற்புவாக்குத்தத்தத்தைவிட வேறுவாக்குத்தத்தங்களைச் செய்துகொள்வதில்லை. உலகத்தின் மத்தியில்வாழ்ந்து, உலகத்தின் ஒளியாகவிளங்கி இல்லறத் திருத்தொண்டில் ஈடுபட்டுழைப்பதே இத்தாபனத்தில் சேர்வோரின் நோக்கமாகும். இப்புதிய தாபனத்தில் பயிற்சிபெற்ற இல்லறத்திருத்தொண்டர்கள் இந்தியாவுக்குத் திரும்பிவந்து இந்தியாவின் மனந்திரும்புதலுக்காக உழைக்கமனமுள்ள மகளிருக்கென உலகொளிதாபனம் ஒன்றை நிறுவி அவர்கட்குத் தகுந்தபயிற்சி அளிப்பதுடன், தாமும் சுவிசேஷப்பரப்புதல் தொண்டில் பங்குபற்றி உழைப்பர்.

ரோமாபுரியில் புதிதாய் நிறுவப்பெற்ற உலகொளி தாபனத்தில் சேர்ந்து பயிற்சிபெறும் பொருட்டு விஜயபுரத்தைச்சேர்ந்த சகோதரிகள் செல்வி ஜோய் டெ அல்மெயிடா, செல்வி பெல்லா டெ அல்மெயிடா என்போரும், மதுரையைச் சேர்ந்த செல்வி கிறெஸ்பி ஜோண் பி. எஸ். ஜி. என்பவரும், மங்களூரைச் சேர்ந்த செல்வி ஜூன் மத்தியாஸ் பி. ஏ., பி. ரி. என்பவரும், விசயநகரைச் சேர்ந்த செல்வி ஜோண் கெலன் ஜோண் என்பவரும், நாகபுரத்தைச்சேர்ந்த செல்வி மார்ஜொறி டெசூசா என்பவரும் ரோமாபுரிக்கு அண்மையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்

இல. M. B. 3296

வண்ணார்பண்ணை
இளையதம்பி
கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை
— வழக்காளி.

எதிராக, கொழும்புத்துறை
வேலுப்பிள்ளை சுப்பையா நடராசா
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M. B. 3296-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஆகனம் 1961-ம் ஆண்டு ஆனிமாதம் 24-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 2மணிதொடக்கம் அக்காணிக்குள்நின்று பிரசித்தவலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: 2,372ரூபா 50சதத்திற்கும, இன்னும் ரூபா 1,500-க்கும் 22-3-60 தொடக்கம் 15-11-60 வரைக்கும் 10%வட்டியும் அதன்பின் கூடியமுழுத்தொகைக்கும் 5%வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும். கோட்டுச்செலவு 216ரூபா 12சதம்.

காணி விபரம்

வடமராகாணம், யாழ்ப்பாணடிஸ்திரிக் சுண்டிக்குளி கோயிற்பற்று கொழும்புத்துறைஇறை, "பெரியபுலம்" என்னும் காணி நில. பர. 5½-யும், வீடும், இணைந்தும். எல்லை: கிழக்கு — றோட்டு. வடக்கு — இ. காகலிங்கத்தின் மனைவி கல்லம்மா விற்குரிய ஆகனம் மேற்கு — சின்னத்தம்பி மயில்வாகனத்திற்குரிய ஆகனம். தெற்கு — ஒழுங்கை. இதடங்கலிற் சொரியலாயும், வீடும், இணைந்தும் நிர்த்தம்.

பதிவு இலக்கம் D 230/285. நியாயசாசன இலக்கம் D 236/67.

இ. கனகரத்தினம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைறோட்,
மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

ஜேர்மனிதேச மேற்றிராணிமார் அனுப்பும் இல்லறத்தொண்டர்

26 பொறியியல் வல்லுனர்களும், தொழில்நுட்ப அறிஞர்களும் கொலோன் பட்டணத்தில் ஆறுமாத விசேஷபயிற்சி பெற்றபின் பிறநாடுகளுக்கு உதவிபுரியுமாறு ஜேர்மனி தேசத்தின் மேற்றிராணிமார்களால் பின்தங்கிநிற்கும் நாடுகளுக்கு அண்மையில் அனுப்பப்பட்டுள்ளனர். கொலோன் பட்டணத்து அதிமேற்றிராணியாரான மேன்மைதங்கிய கருதினால் விறிஞ்ஸ்ஆண்டவர் அவர்கள் ஜேர்மனிதேசத்து மேற்றிராணிமார் சங்கத்தின் சார்பில் பயிற்சி முடித்து வெளிநாடுகளுக்குப் புறப்பட்ட பட்டதாரிகளுக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக் கொண்டாட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "நீங்கள் சுவிஷேசகபோதகர்களாக அல்ல செயலாற்றும் இல்லறத் தொண்டர்களாகவே வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றீர்கள். இவ்வியக்கத்தின் நோக்கம் யாதெனில், நீங்கள் செல்லும் நாடுகளில் வாழும்மக்கள் சுதந்திரகிறீஸ்தவ வாழ்க்கையைச் சுயேச்சையாய் நிறுவுவதற்கு உதவி அளிப்பதேயாகும்."

இருபுதிய விமானங்கள்

'ஏயர் சிலோன்' ஸ்தாபனம் தனது பிறதேச, உள்ளூர்ப் போக்குவரத்துச் சேவைகளுக்கென்று இருபுதியவிமானங்களைவாங்க அரசாங்கத்திடம் அறுபதுலட்சம்ரூபா கடன் கேட்டிருக்கிறது. தற்போது 'ஏயர் சிலோன்' விமானசேவையில் மேலும் பாவனைக்குத் தகுதியற்றிருக்கும் 'டகோட்டா' விமானங்களுக்குப்பதில் புதிய இருவிமானங்களும் உபயோகிக்கப்படும். இந்த 'டகோட்டா' விமானங்களைத் தற்போதையநிலைமையில் இனிமேலும்உபயோகிப்பின் மணித்தியாலம் 750ரூபா வரைசெலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது இதற்கிடையில் அரசாங்கம் உள்ளூர் விமானப்போக்குவரத்துச் சேவைகளைக் கடுமையாகக் குறைப்பது பற்றியும் ஆலோசித்துவருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாலர் பக்கம்

அன்புத் தம்பி, தங்கையரே!

சோம்பல் ஒரு கொடியநோய். இந்நோய் அநேக பாவங்களுக்குக் காரணமாயிருப்பதனாலேயே அது ஏழு தலையான பாவங்களுள் ஒன்றாக வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவனை இந்தப் பாவம் முன்னேற விடாது. சரீரத்தையும், ஆத்துமத்தையும் ஒருங்கே கெடுத்துவிடும். "சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்" என்பது முதுமொழி. எனவே, சோம்பலுக்குச் சிறுவயதிலேயே இடங்கொடுத்தால் அது உங்களைப் பசாசுக்கு அடிமையாக்கிவிடும். இதனிமித்தம் எச்சரிக்கையோடு இருங்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருங்கள். ஏதாவது ஒரு கருமத்தில் கண்ணாயிருந்தால் சோம்பலை அகற்றிவிடலாம். "சோம்பேறியின் இதயம் பசாசின் வேலைத்தளம்" என்று ஆங்கிலப் பழமொழி கூறுகின்றது. அதனால், தம்பி தங்கையரே! விழித்திருங்கள். சாத்தானை வெல்லச் செபம் செய்யுங்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணா

உத்தமநண்பர் இவர்களன்றோ!

தம்பி! நீ பாடசாலைக்குப் போகும் போது உன்பக்கத்து வீட்டு நண்பனையும் குரல்கொடுத்துக் கூட்டிக் கொண்டு போகத் தவறுவதில்லை அல்லவா? நீ இன்று உதைபந்தாட்டத்துக்குப் போவாயானால் உனது நண்பனும் உன்னோடு வருவான் தானே?

ஆமாம் தம்பி, நீ சொல்லுவது என் காதில் கேட்கவே கேட்கிறது. உனக்கு என்ன தெரியும்? அத்துணை பிரமாணிக்கமுள்ள ஒரு நண்பனைக் காணவே முடியாது. அந்தக் கீத பொன்கலன் பொய் பேசு அறியான். ஆயினும், அவனிலும் பார்க்க உயர்ந்த பண்புகள் நிறைந்த உத்தம நண்பரும் உனக்கு இருக்கவே இருக்கிறார்கள். இதை நீ அறியாமலில்லை. ஆனால், அந்த நண்பர்களை நீ சரிவர அறிந்துகொண்டால் அவர்களை உன் அன்புத் தளையால் கட்டிக் கொண்டால், அவர்கள் உலக வாழ்வில் உனது உத்தம பாதுகாவலர்களாய் இருப்பார்கள்.

அது மட்டுமல்ல இவ்வுலகில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் தேவனுடைய மகிமைக்காகச் செய்து. அவருடைய மகிமைக்காகவே வாழ்ந்து பேரின்ப வீட்டை—மோட்சத்தை அடையவும் வழிகாட்டுவார்கள். இப்போது தெரிந்து கொண்டிருப்பாய். இன்று மோட்ச முடிபெற்று விளங்கும் எத்தனையோ பாலிய சுத்தவாளர்கள் உன்னைப் போலவே உலகில் வாழ்ந்தார்கள். உன்னைப்போலவே அவர்களும் பாடசாலைக்குப் போனார்கள், உனது நண்பரோடு நீ விளையாடுவதும், பழகுவதும் போன்று அவர்களும் விளையாடினார்கள், பழகினார்கள்.

நீ ஏன் அவர்களை உன் வாழ்க்கையின் வழிகாட்டிகளாகத் தெரிந்து கொண்டு வாழக் கூடாது? அர்ச். டோமினிக்சவியோ பாடசாலைமாணவருக்கு ஓர் உத்தம வழிகாட்டி. ஒரு பாவத்தைச் செய்வதிலும், மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன் என்று வீரத்தோடு கூறிய சிறுவன் டோமினிக் சாவியோ. பூசைக்கு உதவி செய்யும் பொழுது கனமான பூசைப்புத்தகத்தைச் சுமக்க முடியாமல் எட்டாத பலிபீடத்தில் எட்டியெட்டி உதவிசெய்த அந்தச் சிறுவன் சாவியோ, ஒரு நாள் பலிப்பீடத்தில் வைத்து வணங்கப்படும் பாக்கியத்தைப் பெற்றான். இந்த நண்பனை உனது வழிகாட்டியாகத் தெரிந்து கொண்டு அல்லும் பகலும் அவர் துணையோடு நீ வாழ முடியுமல்லவா? உனது தேவைகளுக்கும் நலன்களுக்குமாகப் பரிந்து பேச இவர் ஒரு சிறந்த நண்பன் தானே.

பூசைப் பரிசாரகனாகப் பலி பீடத்தை அண்டித் தொண்டு செய்த அர்ச். ஞானப்பிரகாசியாரை எடுத்துக்கொண்டால் பாலப்பருவத்திலே அவரது உள்ளத்தில் பிறந்த அன்பு, தியாகமாக மாறியது. யேசுசபைச் சந்நியாசியாகிப் பரிசுத்தமாக வாழ்ந்தார். இளமையின்வனப்பும் பரிசுத்தத்தின் நறுமணமுங் கமழ உத்தமனாக வாழ்ந்து இளமையில் மரணமடைந்தார். பூசைப் பரிசாரகர் எல்லோரும் சுத்தவாளராக வேண்டும் என்பதல்ல, இந்த இளைஞனை உனது தோழனாகக் கொண்டால் உன்னுடைய எதிர்காலம்ஒளி உள்ளதாகமாறும். நாளாந்த வாழ்க்கையில் உனக்கு ஏற்படும் துன்பங்களிலும், அவசரங்களிலும் இந்த அர்ச்சியசிட்டர் உதவி செய்வார். அவர் உதவியைத் தேடு.

தன் ஆதரவற்ற தாயாரையும், குடும்பத்துக்கு ஊதியமளித்த தையற் தொழிலையும் விட்டு விட்டுக் கடவுளின் ஒளியைத் தேடி ஓடினார் அர்ச். ஜெறாட். நீ தேவைக்கள் மிகுந்த குடும்பத்தில் உனது நாளாந்த கடமைகளையிட்டுக் கஷ்டப்படுகிறாயா? அர்ச். யெறாட்டிடம் உனது குறைகளை எல்லாம் எடுத்துக்கூறு. நிச்சயமாக அவர் உதவிசெய்வார்.

பிரியதங்கையே! உனக்கும் உறுதுணையான தோழிகள் இருக்கிறார்கள். மாதர்களில்மாணிக்கமானமரிய கொறற்றி, நாகரீகமும், விஞ்ஞானமும் மனிதனது புனிதத் தன்மையைச் சூறையாடும் இந்த யுகத்தில் மனித வாழ்வின் புனிதத் தன்மையைக்காத்து, தனது உயிரைத் தியாகஞ்செய்த அந்தமங்கை ஏன் உனது உத்தம சிநேகிதி ஆகக்கூடாது? எல்லோருக்கும் மேலாகத் தேவதாயாரை உனது மாதிரிகையாகக் கொண்டு, உனது சினேகிதியாக்கிக் கொண்டால் அவளைவிட உனக்கு வேறு எவருமே வேண்டியதில்லை.

உண்மையும், ஒளியும், சீரிய ஒழுக்கமும், தூய உள்ளமும் கொண்டு வாழ்ந்து உன்னதமோட்சமுடியைப் பெற்றுக்கொண்டநண்பர்கள், உலக சிநேகிதர்கள் எல்லோரிலும் மேலானவர்கள் என்று இதுவரை அறிந்திருப்பீர்கள். நாகரீகமற்ற தகாத ஆடம்பர உடைகள், டாம்பீகச் செலவுகள் இன்னோரன்ன போர்வைகளில் அறிவுமறைந்து, அவதிகள் மலிந்திருக்கும் இக்காலத்தில் இந்தஉத்தமநண்பர்களில் ஒருவரை நீ துணையாகத் தேடிக்கொண்டாலென்ன? திருச்சபைப்புனிதர்களின் ஏட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும் அத்தனை பேரும் உன்னையும் என்னையும்போல் ஒருநாள் இவ்வுலகில் வாழ்ந்திருந்தவர்களே.

ஆகவே என் அருமைத் தம்பி! ஒவ்வொருவரும் ஒவ்வொரு புனிதரை முன்னோடியாக, வழிகாட்டியாக, நண்பனாகத் தெரிந்துகொண்டு வாழ்வதே சிறந்த நட்பின் வழித்துணை கொண்டதுபோலாகும். என் தங்கையே! உனக்கும்தான் இதைக் கூறுகிறேன். புண்ணிய பெண்மணிகளை, புனித பெண்மணிகளை உனது வாழ்க்கைத் தோழிகளாக்கிப் புனித வாழ்வு வாழவேண்டுமென்றே விரும்புகிறேன். — 'யாழூர்கோ'

சிறுவர் அறிவுச் சக்கரம்—2

இரண்டாவது அறிவுச் சக்கரத்துக்கு எவரும் சரியானவிடை அனுப்பவில்லை. ஒரு பிழையோடு ஒருவரும், இரண்டு பிழைகளுடன் பத்துப்பேரும் விடைகள் அனுப்பியிருந்தனர். முதலாவது அறிவுச் சக்கரத்தைவிட இரண்டாவது அறிவுச் சக்கரத்தில் அதிகமானோர் கலந்து கொண்டது பாராட்டத் தக்கதே. இன்னும் பல தம்பி தங்கையர் அறிவுச்சக்கரத்தை நன்கு விரும்புகிறார்கள் என்பதை அவர்களுடைய கடிதங்களிலிருந்து அறியமுடிகிறது.

ஒரு பிழையுடன் விடை அனுப்பியவர்

அ. மேரி பிரான்சீஸ்கா, வயது 13, இளவாலை.

இரண்டுபிழைகளுடன் விடை அனுப்பியவர்கள்

1. ஒனசிப்பர் சகாயநாயகம் போல் வயது 11, கரம்பன்.
2. யோசெவ் ராஜன் பிலுப்புப் பிள்ளை வயது 13, கரம்பன்.
3. யோசெவ் நீக்கலஸ், நாவாந்துறை.
4. றெஜீனா கொன்ஸ்ரன்ரைன், வயது 14, அச்சுவேலி.
5. அ. அன்னமேரி, வயது 13, இளவாலை.
6. மேரி மாகிறேற் யோசெவ், வயது 12, யாழ்ப்பாணம்.
7. எசபியூஸ் பறுனாந்து, வயது 11 கொழும்பு—13.
8. அனாற்றா றாஜினி பஸ்ரியன், அச்சுவேலி.
9. பேர்னடேற் றோகினி பஸ்ரியன்,
10. புஷ்பவதி அப்புத்துரை, வசாவிளான்.

சரியான விடைகள்

— I —

1. அர்ச். பிலோமினம்மாள்
2. அர்ச். அக்னேசம்மாள்
3. அர்ச். கென்றிக்கப்பர் (அரசர்)
4. அர்ச். லூசியா
5. அர்ச். மாற்கு (சுவிசேஷகர்)
6. அர்ச். லவுரேஞ்சியார்
7. அர்ச். சின்னத்தெரேசம்மாள்
8. அர்ச். மர்த்தீனார் (மடுத்தீனார் என்றும், மாட்டீன் என்றும் அழைக்கப்படுபவர்)

— II —

1. லாசாரை உயிர்ப்பித்த புதுமை
2. 'கொல்கொத்தா' என்ற கபால ஸ்தலம்
3. மால்க்குஸ்
4. "பிதாவே! இவர்களுக்கு மன்னித்தருளும்; ஏனெனில், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்."
5. யேசுக்கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்ததும் தமது திருத்தாயாருக்கே முதல் காட்சியளித்தார்.
6. கிளேயோப்பாஸ்
7. அர்ச். தொம்மையப்பர்

செப அப். சபை வெளியீடு

வைகாசி மாதம்

பொதுக்கருத்து — தேவகாரியங்களில் மக்களுக்குள்ள அசட்டைத் தனம் திவ்விய இஸ்பிரீத்துச்சாந்துவின் வரத்தால் நீங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து — வேதபோதக அப்போஸ்தலத்துவத்திற்கு ஏற்றமுறையில் இல்லறவாசிகளுக்குத் தீவிரமான வேதப்பயிற்சி அளிக்கப்படும்படியாக மன்றாடிக் கொள்வது.

* * *

காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 29-ந் தேதி சனிக்கிழமை பி. ப. 4 மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும்.

A S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

தொழில். துன்பத்தின் ஊற்று.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து அவற்றைத் திருச்சபையின் திருநாட்களாக்கியுள்ளது. வைகாசித் திங்கள் 1-ம் நாளைத் தொழிலாளர் தங்கள் நாளாகக் கொண்டாடி வந்தனர். இதனால், நமது மறைந்த மாபெரும் பாப்பு 12-ம் பத்திநாதர் 1955-ம் ஆண்டு வைகாசித் திங்கள் 1-ம் நாளில் புனிதவளனாரது திருநாளை ஏற்படுத்தி அவரைத் தொழிலாளரது பாதுகாவலராக்கினார். இத்திருநாள் கடந்தகால நன்மைகட்காகவும், ஆன்மீக, சரீர இடுக்கண்களிடமிருந்து இறைவன் காத்ததற்காகவும் நன்றிசெலுத்தும் நன்னாள்; நம் வருங்காலத்திற்காகச் செபிக்கும்நாள். வருங்கால வாழ்க்கையிலே இறைவன் தன் அருட்கொடைகளைப் பொழியும்படி வேண்டும்நாள். "ஆண்டவர் ஒரு வீட்டைக் கட்டாவிடின் அதைக் கட்டுகிறவர்கள் வீணாய் உழைக்கின்றார்கள்" (சங். 126 : 1). அதே நேரத்தில் தொழில் பேரின்பத்திற்கோர் வழியென்பதையும் நாம் மறக்கலாகாது (கொலோ. 3, 15; 3, 23—24).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உல்லாச வேளை

— நமது நிருபர் அமலன்

● பத்திலொன்றுப் பணம் ● இத்தாலிய குருமாரின் நிலை ● குருமார் கூடிய நாடு
● பென் ஹர் திரைப்படம் ● அமெரிக்காவில் பாடசாலைப் பிரச்சினை
● கத்தோலிக்க பிரமுகர்கள்

வறுத்த கடலையைக் காகிதப் பொட்டலங்களிற் போட்டுக்கொண்டு வந்தாள் அம்மா. தேநீர்க்கோப்பை களுடன் தொடர்ந்தாள் கார்மெலா. உல்லாச சல்லாபம் ஆரம்பமாயிற்று.

அப்பா: பூசைக்குப்பின் சுவாமியாரிடம் போயிருந்தேன் பத்திலொன்றுப்பணம் கட்டுவதற்கு. யலபேர் நிலுவைகளைச் செலுத்தவில்லையாம் என்று சுவாமியார் சொன்னார்.

பெரியண்ணு: பத்திலொன்றுப் பணம் சுவாமியாரின் தாபரிப்புக்கு உதவுகிறது. கோயில் நிர்வாகத்திற்கும் அதுதேவை. இதை எங்கள் கிறிஸ்தவர்கள் உணர்வதாகத் தெரியவில்லை.

அன்ரன்: ஏன், சுவாமியாருக்குத் தான் பிற இடங்களிலிருந்து நோட்டுநோட்டாகப் பணம் வருகிறதாமே!

கார்மெலா: இவனுக்கு எங்கள் சுவாமியார்மேல் ஆத்திரம். பெரிய சனியன்று சடங்குகட்கு உதவிசெய்கையில் தவறிவிட்டான். நல்ல பேச்சுக்கொடுத்தார் சுவாமியார்.

அம்மா; ஆமாண்டி, அவனில் பிழைபிடிப்பதுதான் நீ கோயிலுக்குப்போனால் செய்கிற வேலை.

அகஸ்ரின்: தம்பி சொல்வதிலும் தவறில்லை. முன்பு இத்தாலி, பிரான்ஸ் முதலிய இடங்களிலிருந்து தருமசிந்தையுள்ளவர்கள் பலர் எங்கள் குருக்களுக்கு உதவிகள் அனுப்புவதுண்டு. இன்றைய நிலையில் அந்த நாடுகளிலும் குருமாரின் வருமானம் மிகக் குறைந்துவிட்டது.

பெரியண்ணு: அண்மையில் ஒரு சஞ்சிகையில் இத்தாலிய குருவானவரின் கேவல நிலைபற்றி வேடிக்கையாகக் குறிப்பிட்டிருந்தது. ஓர் இத்தாலிய குரு தம்மைச்சந்திக்கவந்த ஒரு பெண்ணிடம் ஒரு சுவெட்டர் பின்னிக்கொண்டுவரும்படி கேட்டுக் கொண்டாராம்.

அம்மா: சுவாமிமாரைப்பற்றி இப்படியா கேலிசெய்து பத்திரிகையில் எழுதுகிறார்கள்?

சின்னண்ணு: சுவாமிமாரின் வருமானக்குறைவைஉணர்ந்த இத்தாலிய கத்தோலிக்கர்கள் பலவிதங்களில் அவர்கட்கு உதவுகின்றனர். வசதியுள்ளோர் வாரத்துக்கொருமுறை சுவாமியாருக்குத் தங்கள் இல்லத்தில் போசனம் அளிக்கின்றனர். பெண்கள் தையல்வேலைப்பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர். ஒரு மீசாமில் பாடகர்குழு சனிக்கிழமைகளில் ஆலயத்துக்குச்சென்று குருவானவரின் ஆடைகளைத் தூவைக்கும் தொழிலில் ஈடுபடுகிறதாம்.

அப்பா: சிலமாதங்கட்கு முன்னர் யுனிவர்ஸ் என்ற கத்தோலிக்க வாரப்பத்திரிகையில் படித்தேன். அத்தேசத்தில் கடமையாற்றும் எல்லாக் குருமாருக்கும் அரசாங்கம் வேதனம் அளிக்கிறதாம்.

அகஸ்ரின்: சாதாரண குரவொருவர் வருட உபகார நிதியாக 2,250 ரூபா பெறுகிறார். கணக்குப் பார்த்தால் மாதவேதனம் 187 ரூபா 50 சதம் ஆகிறது. ஒரு குருவின் உணவு, உடை, இல்லப்பிரச்சினை, வேலையாளின் வேதனம், பத்திரிகை புத்தகச் செலவுகள் என்பவற்றுக்கு இது எந்தமூலைக்குக் காணும்?

அம்மா: இத்தாலியிலேதானே பாப்பாண்டவர் இருக்கிறார். அங்கே சுவாமிமார் அதிகமாக இருப்பார்களோ?

சின்னண்ணு: அயர்லாந்தில்தான் குருக்களின் தொகை மிக அதிகம். அங்கு 75 கத்தோலிக்கருக்கு ஒருவர் குருவாகவிருக்கிறார். பிரான்ஸ் தேசம இரண்டாவது தானத்தைப் பெறுகிறது. அங்கு 850 பேருக்கு ஒருவர் குரு. ஆயின், இத்தாலியிலோ 1,500 மக்கட்கு ஒரு குருவே உளர். எங்கள் நாட்டின் நிலையோ சொல்லத்தேவையில்லை.

உல்லாசவேளை

'காவலன்' அளிக்கும் புதியதோர் அம்சம்

பிரதிவாரமும் ஞாயிறு மாலைகளில் அந்தக்குடும்பத்தின் அங்கத்தவர்கள் அத்தனைபேரும் வீட்டுக்கூடத்தில ஒன்றுகூடுவர். அவர்கள் படித்தவர்கள். பண்புள்ளம் கொண்டவர்கள். பக்திநிரம்பியவர்கள். உல்லாசமாக அவர்கள் நடாத்தும் சல்லாபத்தில் நம் திருமறையைப்பற்றிய சுவாரஸ்யமான செய்திகளும் இடம்பெறுகின்றன. அவற்றைத் திரட்டி எமக்குத் தருகிறார் நமது பிரத்தியேக நிருபர் அமலன். அவர் சிரேஷ்டபரீட்சையில் தேறிவிட்டுப் பல்கலைக்கழகப் புகுமுகப்பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துபவர்.

உல்லாசவேளையில் நீங்கள் சந்திக்கும் முக்கிய பிரமுகர்கள்

அப்பா: இளைப்பாறிய ரெயில்வே நிலைய அதிபர்.
பெரியண்ணு: கச்சேரியில் ஒரு பிரதான அதிகாரி.
சின்னண்ணு: ஆசிரியகலாசாலை மாணவன்.
அமலன்: நமது நிருபர்.
அன்ரன்: கடைசிப்பையன். சிரேஷ்ட வகுப்பில் பயிலுகிறான்.
அகஸ்ரின்: மூத்த மாப்பிள்ளை. பட்டதாரி ஆசிரியர்.
நிர்மலா: அவரது மனைவி. பயிற்றப்பட்ட ஆசிரியை.
இயூஜின்: புது மாப்பிள்ளை. மீன்பிடி இலாகா பரிசோதகர்.
ஆஞ்சலா: அவரது மனைவி. ஆங்கில ஆசிரியை.
கார்மெலா: கடைசிப் பெண். கனிஷ்ட வகுப்பில் பயிலுகிறாள்.
அம்மா: இல்லத்தரசி.

இயூஜின்: குருமார்தொகை வரவரக் குறைந்துகொண்டேயிருக்கிறது. இதன் காரணமென்ன?

அகஸ்ரின்: குருமடமொன்றின் முதல்வரான டொன் போஸ்கோ சொல்லுவதுபோல, பையன்கள் பதினெட்டு வயதையடையுமுன் வாழ்க்கையின் சுகபோகங்களை நுகரவிரும்புகின்றனர். அதிகமாகச் சம்பாதிப்பதில் அவர்கள் கவனம் செல்கிறது. பின்னர் துறவறம்பற்றி அவர்கள் கருதஇயலுமா?

அம்மா: இக்காலத்துப் பையன்கட்குச் சினிமா பார்த்தால் போதும். வேறு ஒன்றும் தேவையில்லை.

நிர்மலா: நல்ல திரைப்படங்களும் இடையிடையே வருகின்றன. அவைகளைப்பார்ப்பதற்குப் பையன்கட்கு ஊக்கமளிக்கவேண்டும்.

ஆஞ்சலா: பென் ஹர் என்ற சிறந்த திரைப்படமொன்று விரைவில் இலங்கைக்கு வரப்போகின்றதாம். பத்திரிகையில் படித்தேன்.

அன்ரன்: நல்ல கத்தோலிக்க படம்பென் ஹர். உலகிலேயே அதிக பணம் செலவழித்துத் தயாரிக்கப்பட்ட திரையோவியம். நியூயோர்க்கில் இரண்டரை வருடங்கட்குமுன் ஒரு படமாளிகையில் [illegible] மேல்நாடுகளில் பள்ளிக்கூடங்களில் காட்டிவருகிறார்கள். அதிருக்கட்டும். கத்தோலிக்கபடம் என்றீர்களே யாருடைய கதை அது?

அன்ரன்: யேசுக்கிறிஸ்துநாதர் காலத்தில் வாழ்ந்த யூதன் ஒருவனைப் பற்றியது.

நிர்மலா: அப்பா இவர் போனமாதம் பம்பாய்க்குப் போகவில்லையா? அங்கே இந்தப்படத்தைப் பார்த்துவிட்டுவந்து பிரமாதமாகப் புழுகித் தள்ளுகிறார்.

அகஸ்ரின்: ஆமாம், மெட்ரோ படமாளிகையில் இப்போ 30 வாரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. பென் ஹர் திரையுலகு இதுவரை கண்டிராத அற்புதப்படந்தான். ஆயின், அன்ரன் கூறியதுபோல் உண்மைவரலாறல்ல. வாலஸ் என்ற எழுத்தாளரால் 1880-ம் ஆண்டில் கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் நடந்ததுபோல ஒரு அரசகுல யூதனின் வாழ்க்கையைச் சித்திரித்த கற்பனை நாவல். இந்த நூலில் பலகோடிக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு விற்பனையாக்கப்பட்டனவாம்.

இயூஜின்; இது ஒரு அமெரிக்க திரைப்பட நிறுவனத்தின் தயாரிப்புத்தானே. அமெரிக்கர்கள் தான் [illegible] ஒன்று பாராமல் அற்புதமான திரைப்படங்களைத் தயாரிப்பவர்கள்.

ஆஞ்சலா: அமெரிக்கா என்றவுடன் ஞாபகம் வருகிறது. அமெரிக்க அதிபர் கென்னடியின் மகள் கரோலினைக்கொல்லச் சதி நடந்ததாம் அண்மையில்.

இயூஜின்: சிலபத்திரிகைகள் கரோலினைக் கடத்திக்கொண்டுபோகத் திட்டம் தயாரிக்கப்பட்டதெனக் கூறுகின்றன.

அம்மா: பாவம் கென்னடி தம்பதிகள். அவர்கட்கும் எத்தனை கஷ்டங்கள்.

அகஸ்ரின்: கென்னடியை எதிர்நோக்கும் ஏராளமான பிரச்சினைகள் மத்தியில் கத்தோலிக்கபாடசாலைகள் பற்றியும் ஒரு புதிய பிரச்சினை எழுந்துள்ளது. இதுவரை கத்தோலிக்க பாடசாலைகள் தனிப்பட்ட நிறுவனங்களினால் நிர்வகிக்கப்பட்டுவருகின்றன. நிர்வாகத்துக்கான நிதியுதவியைக் கத்தோலிக்கரே அளித்துவருகின்றனர். ஒரு சாதாரண பிரஜை அரசாங்கத்துக்குச் செலுத்தும் வரிக்குப் பிரதியாக அவனது பிள்ளைகட்குச் சர்வகலாசாலைக் கல்வி வரை இலவசமாகக் கல்வி போதிக்கப்படுகின்றது. ஆயின் கத்தோலிக்க பெற்றோர் இங்ஙனம் வரியைச் செலுத்திவிட்டு எவ்வித பிரதிநன்மையும் பெறுதிருப்பதுடன் கத்தோலிக்க பாடசாலைகளில் பயிலும் தங்கள் பிள்ளைகட்காக ஒரு தொகைப் பணத்தையும் செலவழிக்கவேண்டியவர்களாகின்றனர். இவ்விதஇரட்டைவரியைத் தாங்கள்மட்டும்செலுத்தாதிருக்க, கத்தோலிக்க பாடசாலைகட்கும் ஓரளவு அரசாங்க உதவி கிடைக்கவேண்டுமென அமெரிக்க கத்தோலிக்கர்கள் வாதாடுகின்றனர்.

இயூஜின்: அதிபராக ஒரு கத்தோலிக்கர் அமர்ந்திருக்கும்போதா இந்தப்பிரச்சினையைத் தூண்டவேண்டும்? கத்தோலிக்க திருச்சபை தனது நிர்வாகத்துக்கு உத்தரவிடும் நிலை ஒருபோதும் ஏற்படப்போவதில்லை. என்ற உறுதிமொழியளித்ததன் காரணமாகவே கென்னடி கடந்த தேர்தலில் வெற்றிபெற்றார்.

அகஸ்ரின்: இந்தப்பிரச்சினை சிலகாலமாக எழுப்பப்பட்டுவந்ததோர் கருமம். இப்போதும் தங்கள் உரிமையைப்பெற அமெரிக்க கத்தோலிக்கர்கள் முயற்சிப்பதில் என்ன தவறிருக்கிறது. நீண்டகாலங் கடன்முறையிலாவது தாங்கள் பள்ளிக்கூடங்களைக் கட்டியெழுப்புவதற்கு உதவிசெய்தால் போதுமானது எனக் கருதினால் ஸ்பெல்மன் ஆண்டகை கூறியிருக்கிறாரே.

சின்னண்ணு: கென்னடி, டிகோல் போன்ற நல்ல கத்தோலிக்கர்கள் தங்கள் நாடுகளில் தலைவர்களாகத் தெரியப்பட்டு மிகத்திறமையாகத் தொண்டாற்றுகிறார்கள். ஆயின், கத்தோலிக்கரான காஸ்ட்ரோ கியூபாவையே ரஷியாவுக்கு ஈடுவைத்துவிட்டாரே.

அப்பா: தெற்கு வியற்னாம் குடியரசின் ஜனாதிபதியாக இப்போது தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார் டின்ச்டியம் என்பவர். நல்ல கத்தோலிக்கர் இவர். தெற்கு வியற்னாம் குடியரசை உருவாக்கியபெருமை இவருக்கே உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகத்துறையில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கொண்ட வண. ஒஸ்டின்லான்சா, வண. மைக்கல் குரூஸ் ஆகிய இரு குரவர்களும் உதவியாக நின்றனர் புதிய குரவருக்கு. கோயில்மணிகளின் ஆரவாரம் வானைப்பிழந்தது. பலர்புடை சூழ, பாண்டுவாத்தியங்கள் முழங்க, பாவாடைமீது பவனிவந்தார் புதிய குரவர் அவர்கள் தேவாலயத்தை நோக்கி.

மேலே குறிப்பிட்ட குருமார் இருவரும் உதவிசெய்ய, புதிய குரவர் தமது முதற் திவ்வியபலியை நிறைவேற்றினார் பலகத்துறை அர்ச். அன்னம்மாள் தேவாலயத்தில். தேவாலயப் பீடமோ புதுமை மாறாப்புஷ்பங்களினாலே அலங்கரிக்கப்பட்டிருந்தது. தேவாலயமும் பன்னிறப் பட்டுக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கல்மனமும் கரையக்கூடியவிதமாக ஓர் அருமையான பிரசங்கத்தை நிகழ்த்தினார் வண. சற். என். குரூஸ் சுவாமி அவர்கள். அதைத்தொடர்ந்து வண. வீட் பெர்னாண்டோ சுவாமி அவர்கள் சிங்களத்தில் ஓர் பிரசங்கம் நிகழ்த்தினார். புதிய குரவர் அவர்கள் தமது பெற்றார் உற்றார் உறவினர் அனைவருக்கும் நற்கருணை விருந்து அளித்தார். பூசை முடிந்தபின் புதிய குரவர் அவர்களால் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது.

பலகத்துறை தமிழ்க் கலவன் பாடசாலையில் புதியகுரவருக்கு ஓர் பொது வரவேற்பு அளிப்பதற்கு ஒழுங்கு படுத்தியிருந்தனர் பலகத்துறை கிராமமக்கள். எனவே பாடசாலை இனிதே அலங்கரிக்கப்பட்டிருந்தது. பூசையின் பின் புதிய குரவர் அவர்கள் பலர் புடை சூழப் பாடசாலையை அடைந்து, அரியாசனத்தில் அமர்ந்தார். அவரைச் சூழ நீர்கொழும்புப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. குயின்டின் பெர்னாண்டோ உட்படப் பலபிரமுகர்களும் வண. குருப்பிரசாதிகளும் இருந்தனர். மலர்மாலைசூட்டிப் புதிய குரவர் வரவேற்கப்பட்டார். திரு. மைக்கல் பெர்னாண்டோ என்பவரால் வரவேற்புரை கூறப்பட்டது. பின் பலகத்துறை தமிழ்க்கலவன் பாடசாலை மாணவிகளால் வரவேற்புக்கீதம் பாடப்பட்டது. அதன்பின் வாழ்த்துப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பின் தமிழிலும், சிங்களத்திலும் இருசொற்பொழிவுகள் நடந்தன. கடைசியாகப் புதிய குரவர் அவர்களின் நன்றி உரையுடனும் அருள்மிகு ஆசியுடனும் வரவேற்பு இனிதே முடிவடைந்தது.

கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. M. B. 503

வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்

1. வல்லிபுரம் அப்பாத்துரையும்
2. ஷெயூர் பெண் தங்கரத்தினமும்

— வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு

1. கணவதிப்பிள்ளை செல்லையாவும்
2. ஷெயூர் பெண் நல்லம்மாவும்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 503-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1961-ம் ௵ வைகாசி ௴ 12-ந்௳ வெள்ளிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,996/72-உம், ரூபா 2,000-க்குப் 13-9-55 தொடக்கம் 9-11-55வரை 7வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு 201ரூபா 75சதமும்.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி நல்லூர்கோயிற்பற்று, கொக்குவில்இறை "நினைத்தது முடித்தான்" பர. நில. இலா. மூன்றரை (ப. நி. இ. 3½) யும், வீடும், பனைகளும், செய்பயிர் வான்பயிர்களும், கிணற்றுப்பாகமும், கிழக்குப் பக்கத்திலிருக்கும் கையொழுங்கை யுரித்தும், வழமையான வழிவாய்க்கால் உரித்தும், வடக்கெல்லை ஒழுங்கையால் றோட்டிற்குப்போகும் வழமையான பாதை உரித்தும். எல்லை: கிழக்கு — ஆறுமுகம் வயித்திலிங்கத்திற்குரிய ஆதனம். வடக்கு — செல்லையாவிற்குரிய ஆதனம். மேற்கு — ஆறுமுகம் தம்பையாவிற்கும், பங்காளருக்கும், மறுபேர்கட்குமுரிய ஆதனங்கள். தெற்கு — சந்திரசேகரம் பெண் செல்லம்மாவிற்குரிய ஆதனம். இதடங்கலும்.

காரைநகர், 1961-ம் ௵ பங்குனி ௴ 28-ம் திகதி.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

அம்மா: ஆமாம் நேரமாகிவிட்டது வாருங்கள் சாப்பாட்டுக்கு எனக் கூறிக்கொண்டே எழுந்தாள். சபை கலைந்தது.

(தொடரும்)

முக்கிய அறிவித்தல்

மீட்கப்படாத நகைகளின்

ஏலவிற்பனை

இப்பத்திரிகையில் 25-3-61-லும், 1-4-61-லும் யாழ்ப்பாணம், பெரியதெருவில் அடைவுபிடித்துவரும் அருணாசலம் சண்முகம் மகாதேவா அவர்களிடம் மீட்கப்படாத நகைகளை 21-4-61-இல் ஏலவிற்பனைசெய்வதாக விளம்பரம் செய்திருந்தோம். ஆனால், சிலபல காலதாமதத்தால் ஷெ ஏலவிற்பனவு 1961-ம் ஆண்டு வைகாசிமாதம் 5-ந்திகதிவெள்ளிக்கிழமை 10மணிதொடக்கமே அவரது அடைவு கடையில் நடைபெறும்.

பொ. இராசரத்தினம்,
வெந்தீஸ்மேஸ்தர்.

யாழ்ப்பாணம்,
20-4-61.

1-ம்வருட

மரணஞாபகம்



பிறப்பு: 21-4-1914 **இறப்பு: 4-5-1960**

இலங்கை அரசாங்க அக்றேறியன் சேவையில் ஸ்ரோர்கீப்பராகக் கடமையாற்றிவந்த திரு. மரியாம்பிள்ளை ஞானப்பிரகாசம்அவர்கள் எம்மை மாறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டுப்போன 1-ம் வருடம். அவரின் ஆன்மா சாந்தியடைவதாக! நித்தியபிதாவே, உமது திருக்குமாரனின் விலைமதியாத திருஇரத்தத்தைப்பார்த்து இவருடைய ஆத்துமத்தின்பேரில் இரக்கமாயிரும்.

பிரியமனைவி:
திருமதி தெரேசா ஞானப்பிரகாசம்
மாமன் மாமி:
சி. யோசெவ், பொன்னம்மா யோசெவ்
மற்றவர்கள்:
பாக்கியம் யேசுதாசன், ஏ. யேசுதாசன்,
ஜே. சேவியர், பீற்றர் சிறில்,
றோஸா வஸ்தியாம்பிள்ளை,
சவி[illegible]

காலையில்மலர்ந்து மாலையில்உலர்ந்துபோகும் மலரேபோல்
என் சீவியநாட்கள் மறைந்துபோயின.
என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்.

திரு. ஜி. யோசவ் பொன்ராசா
அவர்களின்

அமரதின நினைவு

4-ம் ஆண்டு

தோற்றம்: 4-5-1921——மறைவு: 4-5-1957

சர்வலோக கர்த்தாவும், பூலோக மீட்பருமாகிய திவ்வியயேசுவே, தேவரீர் மானிடரை இரட்சிக்க மனிதனாக அவதரித்துப் பூங்காவனத்திலே சர்வாங்கமாய் இரத்தவெயர்வை வெயர்த்து மகா சோபதாபம் அனுபவித்துக் கல்வாரியில் சிந்தின திருஇரத்தத்தின் பேறுபலன்களைப்பார்த்து யோசவ் பொன்ராசாவின் ஆத்துமத்திற்கு முடிவில்லாத காலத்தின் பேரின்பசுகத்தைக் கட்டளையிட்டருளும்; நித்தியகாலத்தின்பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது, ஆமென்.

எங்களால் என்றும் மறக்கக்கூடாதவிதமாய் நேசித்துவந்த எமது குடும்பத்தின் அணையாஜோதியும், மதிப்பிற்கும், அன்பிற்குமுரிய எனது நேசப்பத்தாவும், எங்கள் அன்புத் தந்தையருமாகிய திரு. ஜி. யோசவ் பொன்ராசாஅவர்கள் அமரத்துவமடைந்த நாலாம்ஆண்டு 1961-ம்வருடம் வைகாசிமாதம் 4-ந்திகதி வியாழக்கிழமை பூர்த்தியாகிறது. அன்றுகாலை 6-30மணிக்கு அன்னவரின் ஆன்மசாந்திக்காக சஞ்சுவாம்கோவிலிலே ஒருதுக்கப்பூசை நடந்தேறும்.

இதைக்கண்ணுறும் வண. குருமார், சங். கன்னியாஸ்திரிமார், சகோதர சகோதரிகள், பந்துமித்திரர்சகலரும் கத்தோலிக்க கிறிஸ்துவ கருணையோடு இவ்வாத்துமசாந்திக்காக வேண்டிக்கொள்ளத் தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
மனைவி: திருமதி யெஸ்சி மேரி யோசவ்வின் யோசவ்,
மக்கள்:
ஆன் கத்தறின் ஜடா யோசவ், அன்ரன் புஷ்பராசா யோசவ்,
மேரி கில்டா யோசவ், பிரான்சீஸ் வலன்ரைன் றபின்றராசா யோசவ்,
பிரான்சிஸ்கா யெனற் லிண்டா யோசவ்.

4, மருதடிலேன், றக்காறோட்,
நல்லூர் தெற்கு.

மரணஞாபகம்

பிறப்பு: 24-6-1936 **இறப்பு: 21-4-1954**

எங்கள் அருமை மகனும், பிரிய சகோதரனுமாகிய ஜெகநாதன் யேம்ஸ் பரமபதமடைந்த ஏழாவது வருடம் இம்மாதம் 21-ம்திகதி பூர்த்தியாகின்றது. இவரது ஆன்ம சாந்திக்காக அத்தினம் திவ்வியபூசைகண்டு வேண்டிக்கொள்ளுமாறு எல்லோரையும் பரிவாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நீ. யேம்ஸ் குடும்பத்தினர்
ஜெயாமன்றம்',
சில்லாலை.

JAFFNA MUNICIPAL COUNCIL

Supplementary Budget No. 1 of 1961.

NOTICE is hereby given in terms of section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No 1 of the Jaffna Municipal Council for the year 1961 will be open to public inspection at the Municipal Office for seven days from 21st April 1961.

T. S. Durairajah,
MAYOR,
JAFFNA MUNICIPAL COUNCIL.

Municipal Office,
Jaffna, 14th April 1961.

கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. M. B. 2859

மானிப்பாய்
தாமு வேலுப்பிள்ளை
வழக்காளி.
எதிராக, சண்டிலிப்பாய்
சிதம்பரநாதன் ஏகநாதன்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2859-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1961-ம் ஆண்டு வைகாசிமாதம் 6-ந்திகதி 6-5-61 சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,482/75. இதற்குத் தீர்வை ரூபா 1,350-க்கு 8-6-59 திகதிதொடக்கம், 15-3-60 திகதிவரைக்கும் 100-க்குப் 10வீதவட்டியும் பின் முழுத்தொகையும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 211ரூபா 22சதமும்.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்க் கோயிற்பற்று, சண்டிலிப்பாய்இறை "உய்நின்றவளவு" பரப்பு நிலாச்சம் 4½-யும், வீடும், கிணற்றில் பங்கும், வான்பயிர், செய்பயிர்களும். எல்லை: கிழக்கும், தெற்கும் — சபாபதி பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். வடக்கு — ஆறுமுகம் வினாசித்தம்பியின் ஆதனமும், கைஒழுங்கை முகப்பும். மேற்கு — அம்பலவாணர் ஆறுமுகத்துக்கும், சின்னத்துரை பெண் பொன்னம்மாவுக்குமுரிய ஆதனம். இது அடங்கலும், அதைச் சேர்ந்தவைகளும். பதிவுஇலக்கம் E 332|230.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
விதானைவளவு, சித்தன்கேணி,
30-3-61.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க செய்திகள்

● **அர்ச். பத்திரிசியாரின் ஞாபகத் தபால் முத்திரைகள்:** அர்ச். பத்திரிசியாரின் 15-வது நூற்றாண்டு விழாவின் ஞாபகமாக அயர்லாந்து தேசம் அடுத்துவரும் புரட்டாசிமாதத்தில் மூன்று பொதுத்தபால் முத்திரைகளை வெளியிட ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

● **கருதினல் மிம்மியின் பதவியை ஏற்றார்:** அண்மையில் காலம் சென்ற கருதினல் மிம்மி ஆண்டவர் வகித்துவந்த பதவிக்கு, அதாவது மேற்றிராணிமாரை நியமிக்கும் திருச்சங்கத்தின் செயலாளர் பதவிக்கு, மேன்மைதங்கிய கருதினல் கொன்வலோனியறி ஆண்டவர் அவர்கள் பரிசுத்தப்பாப்பரசரால் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

* * *

வத்திக்கான் வானலை நிலையத்திற்கு புது ஒலிபரப்பிக் கருவிகள்

வத்திக்கான் வானலைச் செய்திகளை நேரடியாகக் கேட்கும்பொருட்டு அவுஸ்திரேலியாவினதும் நியூசிலாந்தினதும் கத்தோலிக்கமக்கள் வத்திக்கான் வானலை நிலயத்துக்கு 100 Kw சக்தி உள்ள சிற்றலை ஒலிபரப்பிக்கருவி ஒன்றை அனுப்பியுள்ளனர். இது ரோமைக்கு 10மைலுக்கு அப்பால் உள்ள வத்திக்கான் நிலையத்திலமத்திய சாலையில் நிறுவப்படும். இதையடுத்து ஆபிரிக்காநாடுகளுக்கு நேராக ஒலிபரப்புவதற்கென ஜேர்மனிதேசம் ஓர் புதிய ஒலிபரப்பிக்கருவியை அனுப்பஇருக்கின்றது.

* * *

வத்திக்கான் பொதுச்சங்கம்பற்றி விரிவான அறிக்கைகள்தருக

ஒல்லாந்துதேசத்தின் இருபது கத்தோலிக்கத் தினப்பத்திரிகைகளின் ஆசிரியர்கள் அண்மிவரும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தைப்பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பரிசுத்தஸ்தானம் போதியவசதிகள் அளிக்கவேண்டுமென்று விண்ணப்பித்துள்ளனர். பரிசுத்தசங்கத்தின் நிகழ்ச்சிகளைப்பற்றி விரிவான, உத்தியோகபூர்வமான அறிக்கைகள் பத்திரிகை நிருபர்களுக்கு அளிக்கப்படாவிடின் பொய்வதந்திகளும், கருத்து வேற்றுமைகளும் அதிகமாகத் தலையெடுக்குமென்று அவர்கள் எச்சரிப்புக் கூறியுள்ளனர்.

* * *

சுவிசேஷ போதகர்களுக்கும் வயோதிப உபகாரச் சம்பளம்

ஒல்லாந்துதேசத்தில் வயோதிபர் அனைவருக்கும் அரசாங்கம் உபகாரப் பணம் அழித்து வருகின்றது. 65வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் இலவசவைத்திய வசதிகளுடன் அரசாங்கம் ஒருவருடத்துக்கு 1,200 ரூபா அளித்து வருகின்றது. இவ்விதவயோதிப உபகாரநிதிக்கு 65வயதுக்குக் கீழ்ப்பட்டோர் அனைவரும் கட்டணம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இப்போது, சுவிசேஷதொண்டு ஆற்றியபின் நாட்டுக்குத்திரும்பிவரும் வயோதிபரான சுவிசேஷ தொண்டர்களுக்கும், அவர்கள் வயோதிப நிதிக்குக் கட்டணம் செலுத்தாமல் இருந்தபோதிலும், வயோதிப உபகாரச்சம்பளம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அவர்கள் ஆற்றிய சமூக, கலாசார தொண்டிற்கு நன்மதிப்பு அளிக்கும்படியே அவர்கட்கு இந்தச் சலுகையைவழங்கத் தீர்மானித்துள்ளதென்று தெரியவருகின்றது.

● **யப்பானில் வேதசாட்சிகளின் கோவில்:** யப்பானில் 1597-ம்ஆண்டு வேதசாட்சிகளாகச் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட 26 அர்ச்சியசிஷ்டர்கள் பெயரால் ஓர் தேவாலயம்கட்டி எழுப்புவதற்கு அவர்கள் மரித்தஇடத்திலேயே (நாகசாக்கிப்பட்டணத்துக்கு அருகாமையில்) இப்போது அஸ்திவாரம் இடப்பட்டுள்ளது. இந்த வேதசாட்சிகளுக்கு 1862-ம்ஆண்டு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பட்டது. இவர்களுள் மூவர் யப்பானிய யேசுசபைக் குருக்கள்; 17பேர் யப்பானிய இல்லறவாசிகள்; ஏனைய 6 பேரும் பிறநாடுகளில் இருந்துவந்த வேதபோதகர்கள்.

● **தேவஅழைத்தல் பிரசாரத்தின் பயன்:** கடந்தவருடம் பேர்மிங்காம் பட்டணத்தில் (இங்கிலாந்தில்) கடத்தப்பட்ட தேவஅழைத்தல்களின் இருவாரப் பிரசாரத்தின் பயனாக 200-க்கு அதிகமான மாணவர்கள் தங்களுக்கு தேவஅழைத்தல் உண்டோ எனஅறியும் பொருட்டு ஆரம்பகுருமடத்துக்கும் சந்நியாசசபைகளுக்கும் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுள் நாற்பதுபேர் மேற்றிராசனத்துக் குருமடத்தில் அனுமதிக்கப்பட்டுப் பயிற்சி பெறுகின்றனர். அநேகர் துறவறச்சபைகளின் பயிற்சி முகாங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். ஏனையோர் தங்கட்கு 'அழைத்தல்' வருமட்டும் காத்திருக்கின்றனர்.

மகாராணியாரின் பிறந்தபெருநாள்

மாட்சிமைதங்கிய இரண்டாவதுஎலிசபேத் மகாராணியாரின் 35வதுபிறந்தபெருநாள் சென்ற 21-ந்திகதி வெள்ளிக்கிழமை வந்துபோயிற்று. அவரின் பிறந்தபெருநாளை அதிகாரபூர்வமாக இவ்வருடம் கொண்டாடும்தினம் வருகிற ஆனிமாதம் 10-ந்திகதி சனிக்கிழமையாகும். அன்றுதினமே அவரின் நாயகரான எடின்பேர்க்கின் டியூக் கோமகனார் பிறந்ததினமாகும்.

செத்தல்மிளகாய்க்குத் தடை

உள்நாட்டிலே உற்பத்திசெய்யப்பட்டசெத்தல்மிளகாயை இலங்கையின் மற்றெந்தப்பகுதியிலிருந்தாவது உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியின் அல்லது உதவிஉணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியின் அனுமதியில்லாது யாழ்ப்பாணக்குடாநாட்டுக்கு அனுப்புவதும், ஏற்றிச்செல்வதும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இத்தடை சென்றசனிக்கிழமை விசேஷ "கெசற்" அறிவித்தல்மூலம் பிரசித்தஞ்செய்யப்பட்டுள்ளது.

விபத்துகளும் மரணங்களும்

இலங்கையிலே சென்ற 1960-ம்ஆண்டில் பலவிதப்பட்ட விபத்துகளாலும் மூவாயிரம்பேருக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். இவர்களில் மோட்டர்விபத்துகளால் 250ஆடவர்களும், 50பெண்களும், மாங்களிலிருந்து விழுந்து 379ஆடவர்களும், 4பெண்களும், சர்ப்பங்கள்முதலாம் விஷசெந்துக்களால் தீண்டப்பெற்று 150ஆடவர்களும், 325பெண்களும், நீரில்மூழ்கி 450ஆடவர்களும், 250பெண்களும், போத்தல்விளக்குகளினாலும், பிறவற்றினாலும் தீப்பற்றிஎரிந்து 127ஆடவர்களும், 309பெண்களும் உயிரிழந்துள்ளார்கள்.

உழைப்பின் உன்னதத்தை...

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

அனைவரும் ஒப்படைக்கப்பட்டுள்ளோம்.

சமுதாய வாழ்விலே மிளிர வேண்டிய கிறிஸ்தவ நீதிக்கு உயிருள்ளமாதிரிகையாய் "நீதிமான்" என்ற பட்டத்துக்குரியவராய் நிகரற்றதொழிலாளரின் உபகாரியாய் அர்ச். சூசையப்பர் மகிமைப்படுத்தப்படுகிறார்.

12-ம்பத்திநாத பாப்பரசர் இத்தாலியத் தொழிலாளர் சங்கத்தினருக்கு உரையாற்றுகையில் "உற்பத்தியைப் பெருக்குவதில் எல்லோரும் ஒன்றித்து முயன்று பாடுபடவேண்டும். இந்த ஒருமைப்பாட்டை உருவாக்கும் ஒரேயொரு புளிக்காரம் சுயநிசேஷ மனப்பான்மையே. இம்மனப்பான்மை உலகமீட்பரின் இதயத்திலிருந்து உங்களிடம் பாயவேண்டும். இந்தமனப்பான்மை அதியுன்னதமாக நிரம்பப் பெற்றிருந்தவர் அர்ச். சூசையப்பரே" என்று அறிவுறுத்தினர்.

இவ்வரிய உரைகள் உலகதொழிலாளர் எல்லோருள்ளத்திலும் ஊடுருவிப்பாய வேண்டும். தொழிலின் மகத்துவத்தை நாம் அங்கிகரிக்கவேண்டும். தொழிலுக்கேவலமான ஒரு சமுதாய ஏற்பாடு என்று தப்பான அர்த்தம் செய்துகொள்ளாது, அதன் உன்னதத்தை மதிக்கவேண்டும். கடமையுணர்வுடனும், கண்ணியத்தோடும் நாம் எங்கள் தொழில்களைச் சரிவரப் புரியவேண்டும். நிலையான ஒரு சமூகஅமைதியை நிறுவுவதில் நாம் அயராது ஒத்துழைக்கவேண்டும். தொழில்களியாவும் கிறிஸ்தவ இலட்சியங்களுடன் பரிணமிக்க ஒற்றுமையையும், ஒழுங்கையும் எம்மிடை வளர்க்கவேண்டும். பகையையும் பலாத்காரத்தையும் திவிரமாக வளர்த்துஒற்றுமையை அழிக்கமுனைந்துவரும் நாத்திகத்துக்கெதிராய் ஓயாதுநாம் போராடவேண்டும். அன்பு, அமைதி, சகோதரத்துவம் என்னும் தெய்விகப்பண்புகளினுல் எமது வாழ்க்கையை மதுரமாக்கவேண்டும். ஒவ்வொரு தொழிலாளனும் ஒவ்வொரு தொழிற்சங்கமும் இப் பெருமைப்பாதையிலே பீடுநடைபோடவேண்டும். இவையாவும் பரிபூரணமாக நிறைவேற உழைப்பின் உன்னதத்தை உலகுக்குணர்த்திய உத்தமத்தாதையின் பாதுகாவலும் மாதிரிகையுமே நமக்கு ஆதாரங்களாகும்.

கரம்சிவக்க மரம்சுமந்து, உடல்உழைத்துப் பாடுபட்ட அவரது புனிதவாழ்வு எமக்கு முன்மாதிரிகையாய் வழிகாட்டும் ஒளிவிளக்காய்ப் பிரகாசிக்கவேண்டும்.

வறுமையைச் சிநேகித்தாதையை, பொறுமையின் கண்ணுடியான தந்தையை, திருக்குடும்பத்தின் பாதுகாவலரை, கிறிஸ்தவத் தொழிலாளரின் மாதிரிகையை நாம் இரந்துவேண்டுவோம். அவரது துணையோடு உழைப்பின்வழியே, உயர்வின்வழி; அர்ச்சிப்பின் ஆக்கவழி இதுவே என்பதை யுணர்ந்து எம்வாழ்வைப் புனிதப்படுத்துவோம்.

—*—

சிறுபான்மைச் சமூகங்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளது. சகிப்புத் தன்மையும், பாரபட்சமின்றி நடத்தப்படுதலும், நியாயமானதும், அரசியல் சட்டத்துக்குகந்ததுமாய் இருப்பதுமல்லாமல், பர்மாவின் சுபீட்சவாழ்வுக்கும் அவசியம் என்றே நான் கூறுவேன். பர்மாஇராச்சியத்தில் பலஇனங்களை, பலமதங்களைச்சார்ந்த பிரசைகள் வாழ்கின்றனர். நமது நாட்டின் முன்னேற்றத்துக்கும், சுபீட்சத்துக்கும் இம்மக்கள்அனைவரும் ஒன்றுபட்டுப் பொதுநன்மைக்காக உழைத்தல் அவசியமாகும். இதற்கு வெவ்வேறு இனத்தையும், மதத்தையும் சேர்ந்தவர்கள் மத்தியில்சகிப்பு மனப்பான்மையும், பரஸ்பரநன்மதிப்பும் உள்ள சூழ்நிலை உருவாகவேண்டும்" என்று பிரதம மந்திரியவர்கள் குறிப்பிட்டார்.

தற்கால உலகின் பெரும் பிரச்சினை— உலோகாயத வாதம்

அவர் தொடர்ந்து பேசுகையில் "இந்த நூற்றாண்டில் விஞ்ஞானத் துறையில் குறிப்பிட்டுள்ள ஆச்சரியத்துக்குரிய முன்னேற்றத்தின் பயனாக மனிதனை மற்ற உயிர்களிலிருந்து பிரித்துக்காட்டும் ஆத்மீக விஷயங்கள் அதிகமாகத் தாக்கப்பட்டுவருகின்றன. உலகெங்கும் பரவிவரும் உலோகாயதத்தைப்பற்றி மதத் தலைவர்கள் மட்டுமல்ல, நற்சிந்தனையுள்ளஎவருமே இப்போது கவலைகொள்கின்றனர்.

"மனிதன் தனது சிறப்பியல்பைப் பாதுகாக்க வேண்டுமாயின் இந்தத் தப்பிதமான போக்கிற்கு முற்றுப் புள்ளிஇடவேண்டும். மனிதனுடைய ஆத்மீகவிஷயங்களுக்கும், சரீரசம்பந்தமான விஷயங்களுக்குமிடையில் தகுந்த இணைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும். இதுவே நான் அறிந்த அளவில் தற்கால உலகம் மேற்கொள்ளவேண்டிய பெரும் பிரச்சினையாகும். இப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில்தான் தனிமனிதனதும், சமூகத்தினதும், நாட்டினதும், மனுக்குலம் முழுவதினதும் நலன்தங்கியிருக்கிறது. இப் பிரச்சினையைத் தீர்த்துவைத்தல் மதபேதமின்றி எல்லாக் குருக்களுக்கும், எல்லாப் பிரசைகளுக்கும் உரியதோர் பெரும் பொறுப்பாகும்" என்று ஊனு கூறிமுடித்தார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday April 29-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org